Registered at the G. P. O. AS A NEWSPAPER

சன்மார்க்கபோதினி

பத்திரவிலைவிகிதம்
[illegible] ரூபா உ-00
தபாற் செலவு
இலங்கைக்கு சதம் ௰
இந்தியாவுக்குசதம் ௰
பிறதேசங்களுக்கு [illegible]

SANMARKA POTHINI

விளம்பரவிலைவிகிதம்
வரி ஒன்றுக்குசதம் ௧௦
௧௦ க்குமேல்ஒருவரிக்கு ௫
௨௦ க்குமேல்........... அ
இணைப்பிரசுர மொன்றெ
ன்றிற்கும்3-ல் ஒன்று

ஒன்றுவிட்டொரு புதன்கிழமைகளிற்
பிரசுரஞ்செய்யப்படும்.

சாதுசங்கஞ் சன்மார்க்கசாதனம்

Published on every
other Wednesday.

VOL. XXXIV. JAFFNA NOVEMBER 27th 1918. No. 23

௩௪ம் புத்தகம். யாழ்ப்பாணம் ௧௯௧௮ம் ஹு கார்த்திகைமீ ௨௭௨ புதன்கிழமை. சங்கியை ௨௩.

LIBRARY
2 -10- 1995
UNIVERSITY OF JAFFNA

வெள்ள விபத்து.

"ஒறுத்தது மலியும்" என்றபடி மாரிகாலமென்றதையும் மறந்து தூரப்போயிருந்தமழை சென்ற 17ஆ ஞாயிற்றுக்கிழமை முழுவதும் கச்சான்காற்றோடுகூடி எச்சாதியத்தாரையும் வருத்திவிட்டது. அன்றுமுழுதும் சொரிசொரியென்று மழை சொரிந்தவண்ணமாயிருக்க மேல்காற்றும் அடியடியென் றடித்ததினால் ஆடு மாடுகள் அவலமாய்ச் சாகவும், வீடுவாசல்கள் வெள்ளத்துளாழவும், காடு காடுகள் சமுத்திரமாகவும், தேடுசொத்துகள் தெருநீரைக்கிரிவவும், கோடு கொம்புகள் குப்புறவிழவும், பள்ளநிலங்களில் வள்ளஞ் செலுத்தவும், உள்ளபொருளையிழந்து உயிர்தப்பியோடவும், பெரியவீடுகள் தேடித்திரிந்தும் கோயில்களிற்போய்க்குடிபுகவும் தெருவோரங்களில்சிறுகுடிசைகளமைத்தும் பெரியோர் சிறியோரென்ற பேதமில்லாமல் பரிதாபமுள்ள பாடுகள்பட்டனர். புகையிலைச் சிப்பங்களோ, பெட்டி பேழைகளோ, தேங்காய் மாங்காய்களோ எல்லாவற்றையும் வெள்ளம் வாரிப்போயின. [illegible] டுகள் அகப்பட்டாலும் நனைந்தும் உக்கியும்போயின. நெற்பயிரும் பலஇடங்களில் குருத்துக்கக்கியும் வெள்ளத்துளாழ்ந்தும், வாழை மரவள்ளிபாதியவைகள் மடிந்து வீழ்ந்தும், வெற்றிலை கத்தரிமுதலிய பயிர்களையும் கனசேதப்படுத்தின. ஆடு மாடுகள் ஒவ்வொருகிராமங்களில் ஆயிரக்கணக்காய் மாண்டன. கந்தாவில்தெரு வெள்ளத்தால் மூடுண்டதினால் திசைதெரியாமல் ஓர்மனிதன் குழியுள்வீழ்ந்திறந்தான். அத்தெருவில் ஓர் குதிரைவண்டி புரண்டு குதிரையிறந்தது. உடுவிலில் கட்டியமாடுகளை மாலையில் அவிழ்க்கப்போன ஒருவன் திரும்பிவரவில்லையாம். மறுநாள் காலையில் மாடுகள் இறந்துகிடக்கவும் அவன் கிணற்றுள்வீழ்ந்துகிடக்கவுங்காணப்பட்டானாம். புகைரதப்பாதையும் வெள்ளத்தாலறுண்டு இரண்டுமூன்று தினங்களாய்ப் போக்குவரவு தடைப்பட்டதுடன் தபாற்களுந் தடைப்பட்டன. கோண்டாவில், கொக்குவில், ஏழாலை, அளவெட்டி, உரும்பராய், ஊரெழு, அச்செழு, நீர்வேலி, சுதுமலை, நவாலி, கந்தரோடை, மயிலிட்டி, பலாலி ஆதிய இடங்களிற் சனங்களின் வீடுகள் நீருளாழ்ந்ததினால் குடியிருக்கவிடமின்றி அவதிப்படுகின்றனர். உள்ள பொருட்களையும் வெள்ளம் வாரிப்போயினமையால் உண்ண உடுக்க வழியின்றித் தவித்தாரனேகர். காசிருந்தும் அரிசிவாங்கவும் வசதியின்றி அவதிப்பட்டாரனேகர். வீடுவாசலுமின்றி இருக்கவசதியின்றி இக்கட்டுறுவோர் பலர். சில ரோட்டுகள் வெள்ளத்தால் மூடுண்டன. கடற்கரை ரோட்டுக்கள் பெரும்பாலும் அள்ளுண்டன. தெருவோரங்களில் மரங்கள் வீழ்ந்தும் வாய்க்கால்வெட்டியும் தெருவையரித்தும் போக்குவரவுக்குத தொல்லை வருத்தின. பகிரங்க வேலைப்பகுதியாருக்கு அதிக செலவையுண்டாக்கின.

யுத்தம்நிறுத்திய சந்தோஷகொண்டாட்டம்.

உலகமெல்லாவற்றையும் பதைக்கவைத்த கொடிய குரூர ஐரோப்பியயுத்தமானது சமாதான மாவதற்காக நிறுத்தப்பட்டதென்ற சுபசெய்தி அந்தயுத்தத்தாலே கஷ்டப்பட்ட உலகமடங்கலுக்குமே சந்தோஷசங்கதியாயிற்று அதனாலே இச்செய்தியைப்பெற்று உலகம் அடங்கலுமே அக்களித்துக் கொண்டாட்டஞ்செய்யலாயிற்று. நம் இலங்கையிலுள்ளாரும் விசேஷமாக இராசதானியிலுள்ளாரும் விசேஷ கொண்டாட்டங்கள்செய்து மகிழ்ந்தனர். நம்முடைய யாழ்ப்பாணத்தாரும் மற்றவருக்குப் பின்போகாது கொண்டாட்டம் நடத்தினர். சென்ற 15ம் 16ந் திகதிகள் அரசாட்சி விடுதலைநாட்களாயின. கல்லூரிகளின் தலைவர்களும் பிறரும் கச்சேரியிலே கூட்டம்வைத்து ஆலோசனைபண்ணி 15ஆ வெள்ளிக்கிழமை சாயந்தரம் நாலுமணிக்கு முற்றவெளியிலே இக்கொண்டாட்டம் நடத்தப்படுமென்றும், சகல கல்லூரிகள் கலாசாலைகளின் ஆண்பிள்ளைகள் பெண்பிள்ளைகள் சகலரும் அவ்வேளை அங்கிலோ கொடிகள் ஐக்கிய இராச்சியங்களின் கொடிகளோடே அங்குவந்து சேரவேண்டுமென்றும், இராசாவினிடமாகத் தேசாதிபதியும், தேசாதிபதியினிடமாய் ஏசன்றரும் இருப்பதால் சனங்கள்கூடிச் சகலவரிசைகளோடும் ஏசன்றரைப் பவனியாக முற்றவெளிக்கு அழைத்துப்போகவேண்டுமென்றுந் தீர்மானித்தார்கள். அவர்கள் தீர்மானித்து விளம்பரப்படுத்தியபடி எல்லாஞ் சிறப்பாயும் ஒழுங்காயும் நடந்துமுடிந்தன. [illegible] ரு விசேஷமாக வியாபாரிகளுடைய சாய்ப்புகள் வீட்டுவாயில்களெல்லாஞ் சிங்காரிக்கப்பட்டிருந்தன. வாழைகள் கட்டித் தோரணங்கள்கட்டிக் கொடிகள்தூக்கிக் கம்பங்கள்நாட்டி எங்கும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. நாலுமணிக்குக் கன்னியாஸ்திரீகளும் அவர்களுடைய பள்ளிக்கூடப்பெண்பிள்ளைகளும் கொடிபிடித்து நிரையே செல்ல, அவர்கள்பின்னே சென் பத்திரிசியார்கல்லூரி மாணுக்கர் சங்கீதங்கள்பாடிச்செல்ல, அவர்கள்பின்னே கல்லூரியின ஸ்கவுட்ஸ்கூட்டத்தார் கொடிபிடித்து தீம் தீம் என்ற நடையோடும் பாக்களோடும் ஆனந்தக்கூச்சலோடும் பவனியாகச்சென்று முற்றவெளிசேர, மற்றைய கல்லூரிகளின் மாணுக்கர்கள் மாணுக்கிகளும் வந்து சேர்ந்தார்கள். சனங்களும் உத்தியோகஸ்தர்களும் கச்சேரிக்குச்சென்று ஏசன்றர் மெஸ், ஹோர்ஸ்பரோதுரையைப் பட்டுக்குடைகள்பிடித்து மேளதாள வாத்தியங்கள் முழக்கப் பவனியாக அழைத்துவந்தார்கள். ஏசன்றர் மெஸ், ஹோர்ஸ்பரோதுரை ஒருபரிமேலிவர்ந்துவர இருமருங்கும்முன்னும்பின்னும்பட்டுக்குடைகள்பிடித்தப்பட்டினப்பிரவேசஞ்செய்து முற்றவெளிசேர்ந்து உயராசனத்திலேவீற்றிருந்து அன்றைக் கூட்டத்துடையவும் கொண்டாட்டத்துடையவும் நோக்கங்களை எடுத்துப்பேசி இதுகாலவரையிலே உலகத்திலே இவ்வளவு ஒரு பெரியயுத்தம் நடந்திருக்கவில்லையென்றும், இந்தியர் கூறுகின்ற பெரிய பாரதயுத்தம் இராமயுத்தங்கள்தாமும் இதற்கு இணையாகாவென்றும், இந்தக் கொடிய யுத்தம் ஒருமுடிபுக்குவந்ததும் ஐக்கியகட்சியாருக்கு வெற்றியானதும் பெரிய சந்தோஷமென்றும் பலவும் பேசினார். அதற்குப்பின் கௌரவ.இராமநாதன் பேசியதில் அர்ச். ஜோர்ஜ இங்கிலாந்தின்பாதுகாவலன் என்றுசொன்னார். இவருக்குப்பின் மெஸ், கென்ஸ் செல்வத்துரை தமிழிலே சிறந்த பாஷணமுரைத்தார். இவருக்குப்பின் சேர் அம்பலவாணர் கனகசபை சிலபேசி இந்த யுத்தமானது உலக சம்பவங்களிலே சம்பவங்களிலே விசேஷ சம்பவமென்று சொன்னார். ஏசன்றுத்துரையுடைய கேள்விப்படி மகா வண. மஜூல் சுவாமியார் பிரான்சுதேசத்தைப்பற்றி வெகு வாக்கலங்காரத்தோடேபேசிச் சபையாரை மகிழ்வித்தார். கனம் பிக்னல் ஐயர் அமரிக்காவைக்குறித்து வெகு மனோவேகத்தோடு புகழ்ந்துபேசினார். கடைசியிலே தேவன் அரசரைக் காப்பாற்றுவாராகவெனும் பாட்டுப்பாடிமுடியக் கூட்டம் சமாப்தியாய்க் கலைந்துபோயிற்று.

புதிய தபால் தந்திச் செலவுவீதம்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும்

	சதம்
4 அவுன்சுக்கு மேற்படாத கடிதத்துக்கு	...6
மேற்படும் ஒவ்வொரு 4 அவுன்சுக்கும் அதற்குள்ளும்	...6
போஸ்றகாட்	...4
உள்நாட்டுக்கு மறுமொழிகொடுப்பதுஞ்சேர்ந்த போஸ்றகாட்	...8
றெஜிஸ்தர்பண்ணியபத்திரிகைகளுக்கு	...3
2 அவுன்சுக்குமேற்படாத திறந்தபாற்கட்டுகளுக்கு	...3
(2 அவுன்சுக்குமேற்பட்ட திறந்த தபாற்கட்டுகளுக்கும் அச்சிடப்பட்ட கடுதாசிக்கட்டுகளுக்கும் வழக்கமான தபாற்கட்டுகளுக்குமுள்ளவீதம்)	
2 அவுன்சுக்கு மேற்படாதடிஸதிறிக் தபால் (உள்நாட்டுக்குமாத்திரம்) அவுன்ச 1-க்கு	...3

பிறதேசதபால்

பெரியபிரித்தானியாவுக்குச்சேர்ந்த தேசங்க[illegible] ரு அவுன்சுக்கும் அதன்பகுதிக்கும் [illegible] பாற்செலவு	...9
அதற்குமேற்படும் ஒவ்வொரு அவுன்சுக்கும் அதன்பகுதிக்கும்	...6

றிஜிஸ்றர்செலவு

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் பிறதேசங்களுக்கும் போகின்ற தபாற்கட்டுகளுக்கும தபால்களுக்கும் றிஜிஸ்றர்பண்ணுஞ் செலவு	...15

இலங்கை தபாற்கட்டுச்செலவுவீதம்.

இதுவரையிலும் வைக்கப்பட்டிருக்கும் தபாற்கட்டுச்செலவோடு மேலதிகமாக 5 சதம் கூட்டப்படும். எப்படியென்றால்,

1 இறாத்தலுக்கு மேற்படாத கட்டுக்கு				...25
1	இறாத்தலுக்குமேல்	2	இறாத்தலுக்குள்	35
2	"	3	"	45
3	"	5	"	55
5	"	6	"	65
6	"	7	"	75
7	"	8	"	85
8	"	9	"	95
9	"	11	"	1-05

இலங்கை தந்திச்சலார்.

விலாசமுஞ்சேர்ந்த 10 சொற்களுக்கு	40
மேற்படும் 2 சொல்லுக்கு	5

சென்ற 18ஆ தொடக்கமாக இவ்வரிகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன.

கையொப்பவரவு.

அச்சுவேலி	
ஸ்ரீ வா. இராமலிங்கம்	2—00
" சி. செல்லையா உபாத்தியாயர்	1—50
" சி. முருகேசு	2—00
S. Asaippillai Esq C. G. R.	10—00
உடுப்பிட்டி.	
V. W. Sinnah Esq.	2—00
Jaffna	
Asst. Supdt. of Polic. N. P.	2—50

யாழ்ப்பாணம்.

ஊர்ச்சீர்—மறுத்திருந்தமாரி மனுஷர்வெறுக்கும்படி மேல்காற்றுடனகூடி வருஷித்துக் கனசேதத்தை வருத்தியது. கெடுப்பதும் கொடுப்பதும் மழையாதலால் இவ்வருடம் பஞ்சத்தாலும் பட்டினியாலும் மனுஷர் வருந்துவது தேவசித்தம்போலும். [illegible] எல்லாப்பொருட்களும் நாளடைவில் விலையேறியேவருகிறது. "மழைவிட்டும் தூவானம்விடவில்லை" யென்பதுபோல யுத்தம் ஓய்ந்தும் அதனாலுண்டாகிய பஞ்சம் நீங்கவில்லை. சமீபத்தில்நீங்குமென்ற நம்பிக்கையுமில்லை. நவீனசுரம் இன்னுந் தொலையவில்லை.

தருமங்கொடுத்தல்—நம்மூரிலும் வேறிடங்களிலும் நம் ஏசன்றவர்களின்கருணையால் ஏழைகளுக்கு அரிசிகொடுக்கப்பட்டது. சென்ற 16ஆயும் 18ஆயும் யாழ்ப்பாணச் சாராயக்குத்தகைகாரன் ஸ்ரீ கதிரேசபிள்ளை ஏழைகளுக்கு அரிசியும் காய்பிஞ்சும் கொடுத்துதவினர்.

மரணசங்கதி—நம் பத்திராபிமானியும் பரோபகாரியும் நற்குணநற்செய்கையுடையரும் பிரமசாரிவிரதம்பூண்டு யாவராலும் புகழப்பட்டவருமான மெஸ். அ. செ. இளையதம்பி சென்றமீ 30ஆ தம்செனன ஊராகிய மாதகலில் தேகவியோகமானரென்றசங்கதி மறுநாள் அவர்தம்பியாரும் நம்பத்திராபிமானியும் பழையகுடிதருமாகிய மெஸ. அ. செ. அ. வுக்குத் தந்திமூலமாய்ப் போய்ச்சேர்ந்து அவர் நமக்கறிவித்திருக்கிறார். இவர் நம் பத்திரிகைமட்டில் நடந்துகொண்டபடியே மற்றுங் கருமங்களிலும் கண்ணியமாயும் யோக்கியமாயும் நடந்துவந்தாரென நம்புகிறோம். இவரைப் பிரிந்து ஆறுத்துயருறும் அவர் சகோதரனுடனும் மற்றும் இனசன சினேகிதருடனும் நாமுமொருவராய் மனம்வருந்துகிறோம்.

குருஅபிஷேகம்—சென்ற 15ஆ வெள்ளிக்கிழமை பண்டத்தரிப்பில் அமரிக்கன்மிஷன் பிரசங்கியாராயிருந்த மெஸ், ஏ. கே. கந்தையா குருஅபிஷேகம்பெற்றார். இவர் நம்மூரிலிருந்து நம்மூரில்கற்று நம்மால்

நோய்தீர வுபாயம்.

அநேக ரோகங்களுக்கு மூத்திர உப்பு விஷமே (யூரிக் ஆஸிட் பாய்ஸன்) காரணம். துர்ப்பலமாயும், ரோகம் முதிர்ந்தும் உள்ள மூத்திரப்பை தான் செய்யவேண்டியபடி செய்யாமல், ரத்தத்திலிருந்து மூத்திரத்தை வடிகட்டாதது ஆகிறது. உடம்பு முழுதும் சுகமாயிருக்கிறதற்கு முக்கியமான காரியம் மூத்திர விஷம் ரத்தத்திலிருந்து பிரிவதுதான்.

பலமில்லாமலும்,ரோகம் நிறைந்தும் இருக்கிற மூத்திரப்பையின் லக்ஷணங்களாவன:—முதுகுநோய், தூக்கம் பிடியாதிருத்தல், ஜலம் கொஞ்சமா யிறங்குவது, மூத்திரம் நிறமாறுதல், மூத்திரத்திலிருந்து புகை கிளம்புவது, எப்போதும் தாகம், ஆயாசம், பலவீனமான இருதயம், தலைநோவு; தைரியமில்லாமை, கண்பார்வையின் மந்தம், தலைச்சுற்று, கீல்களும், சதைகளும் புண்ணாகி அசைக்க முடியாமற் போவது, மறதி, சாதாரண பலவீனம் முதலானவை. இந்த லக்ஷணங்கள் உண்டானபோது, அசட்டை செய்துவிட்டால், கீழே சொல்லும் ரோகங்கள் தப்பாமல் உண்டாகும். மூத்திர ரோகம், திமிர்வாயு, மகோதரம், பகு மூத்திர ரோகம் முதலானவைகளும், ஸ்திரீரோகமென்று தப்பாக எண்ணிக்கொள்ளும் ரோகங்களும்.

(டோன்ஸ் பாக்-ஏக் கிட்னி பில்ஸ்) டோன் அவர்களுடைய முதுகுநோய் மூத்திரப்பை ரோக மாத்திரைகள, மூத்திரப்பையிலும், மூத்திர அவயவங்களிலும் புகுந்து, மூத்திர விஷத்தை ரத்தத்திலிருந்து பிரிக்கும். அது நடந்தால், சரீரசுகம் தப்பாமல உண்டாகும். சுகமாய் இருக்கவேண்டுமானல் மூத்திரப்பை ரோக மடையாமல் வைத்துக்கொள்ளவேண்டும். மூத்திரப்பையை ரோகமடையாமல் காத்துக்கொள்வதற்கு ஏற்ற மருந்து (டோன்ஸ் பாக்-ஏக் கிட்னி பில்ஸ்) டோன் அவர்களுடைய முதுகு நோய் மூத்திரப்பை ரோகமாத்திரைகளே.

Doan's
Backache
Kidney
Pills Co.
DOAN'S BACKACHE KIDNEY PILLS

ஒரு புட்டி விலை, ரூபா. 2 0 0
6 புட்டியின் விலை, ரூபா. 10 8 0

இவை, சீமை மருந்து வியாபாரிகள் எல்லாரிடத்திலும், சென்னையில் ஏஜண்ட் ஆர் டப்பிலியு. ஏச். ஹால்ஸ் துரையவர்களிடத்திலும் கிடைக்கும்.

கண்டறியப்பட்டவர். இவர்க்குக் கிடைத்த கண்ணியத்தினால் நாமும் அகமகிழுகிறோம்.

அச்சுவேலி இங்கிலிஷ் வித்தியாசாலை— இவ் வித்தியாசாலையின் அரசாட்சியாரின் பரீட்சைமுடிந்து விடுதலை விடப்பட்டது. வருகிற திங்கட்கிழமை அதாவது மார்கழி மீ 2உ மறுபடி ஆரம்பமாகும். புதிதாய்ச் சேரவிரும்புவோர் பிறப்புச் சற்றிபிக்கேற்றுடனும் முன்படித்த கலாசாலைச் சற்றிபிக்கேற்றுடனும் வரவேண்டும்.

[illegible]— வெள்ளத்தால் புகையிரதபாதை சேதமுற்றதால் பரந்தன் வரையும்மாத்திரம் புகையிரதங்கள் வந்தன. பாதை திருத்தப்பட்டதினால் 22உ முதல் காங்கேசன்துறைவரைக்கும் புகையிரதம் வரத்தொடங்கிவிட்டது. அவ்விதமே கொழும்புக்குஞ் செல்லுகின்றன.

அச்சுவேலி யுத்தநிறுத்த மகிழ்ச்சிக்கொண்டாட்டம்.

இம்மீ 16உ சாயந்தரம் 3 மணியளவில் அச்சுவேலி ஆங்கிலபாடசாலையில் உபவித்தியாதரிசி ஸ்ரீமான் ஏ. பொன்னையா அவர்கள் முயற்சியால் யுத்த சமாதானத்தைப்பற்றி யோர்கூட்டம் நடைபெற்றது. அங்கிலோபாடசாலையானது சாலைகளாலும் தோரணங்களாலும் பலவித யுத்தபடங்களாலும் பலதேச அரசர்களது படங்களாலும் சிங்காரிக்கப்பட்டிருக்க, மேனாளவாத்தியமாரப்பரித்த, போதகர், பிறக்றர், நொத்தாரிஸ்மார், விதானை உடையார்மார்; [illegible], உபாத்திமார், பாடசாலைப்பிள்ளைகள், பெண்கள் முதலியோர் எள்ளிடமின்றி நிரம்பியிருக்க, ஸ்ரீமான் வித்தியாதரிசியவர்கள் அக்கிராசனமமர, கனம் ஈ. ரீ. உவில்லியம்ஸ் போதகரவர்கள் நறுமணங்கமழும் பூந்தொடையலை அக்கிராசனாதிபதியவர்கள் கண்டத்திற்றரிக்க, எம்மதத்தவர்க்குஞ் சம்மதமாக "அங்கிங்கெனாதபடி யெங்குமபிரகாசமாய்" என்ற தாயுமான சுவாமிகள்பாடல் இருந்தோர் உள்ளங் கனிகொள்ளத்தக்கதாகப் பாடப்பட, அக்கிராசனாதிபதியவர்களெழுந்து "குடைநிழலிருந்து குஞ்சரமூர்ந்தோர் நடைமெலிந்தோரூர் நண்ணினும் நண்ணுவர்" என்ற அதிவீரராம பாண்டியன் வாக்கைப் பிடிகையாய்க்கொண்டு சாமுகவெங்கணும் மங்காப் புகழ்படைத்திலங்கும் அங்கிலோ ராச்சியமானது சென்ற நாலுவருடகாலமாக நடத்திவந்த யுத்தசம்பவங்களையும் தற்போதுநடந்த 35 நிபந்தனைகளையும் ஆதியோடந்தமாய்ப் பாடசாலைப் பிள்ளைகளும் இனிது விளங்கத்தக்கதான இனிய செந்தமிழ்ப்பாஷையில் விரித்துரைத்து ஆசனத்தமர்ந்தனர். அதன்பின் அச்சுவேலித்திருச்சபைப்போதகர் கனம் ஈ. ரீ. உவில்லியம்ஸ் அவர்கள் [illegible] வந்தனங்கூறி, அக்கிராசனர் சபையோரெல்லாரையும் யுத்தபூமிக்குக் கூட்டிச்சென்று சமுத்திரங்கள், பட்டினங்கள், மலைகள், ஆறுகள், ஆகாயரதங்கள், யுத்தக்கப்பல்கள், தண்ணீர்க்கீழ்நீந்திக்கப்பல்கள், துப்பாக்கிகள், பீரங்கிகள், யாவற்றையுங்காண்பித்துவந்திருக்கிறோமென்றும், பீரங்கிச் சத்தம் மாத்திரம் நாங்கள்காணாத குறையொன்றிருக்க ஏனைய யாவையுங் கண்டோமென்று கூறியதுடன் இச்சண்டையினால் யாழ்ப்பாணத்திலுள்ளவர்களாகிய நாம் அடைந்த பல கஷ்டநஷ்டங்களையும் கல்வியறிவற்றசனங்கள் அக்கால் பீதிகொண்டு சேர்மனியரைப்பற்றி மனதிலெண்ணிய வீண் எண்ணங்களையும் தெளிவாயும் விரிவாயும் விரித்துரைத்திருக்க; அங்கிலோபாடசாலைப் பிரதம ஆசிரியரவர்களெழுந்து காருண்ணியமும் கண்ணியமும் பொருந்திய அங்கிலோஅரசின்கீழ் நாம் அடையுஞ் சலாக்கியங்களையும் அவ்வரசின் நீதியையும் இச்சண்டையினால் இனிமேல் உலகம் அடையும் பலன்களையும் பற்பலதேசங்களில் நடந்த சண்டைகளினால் உலகம் அடைந்த மாறுதல்களையும் தெளிவாய்ப்பேசியிருக்க; யுத்தபூமிக்குப்போகாதிருந்தும் பீரங்கி துப்பாக்கி முதலிய மருந்து இல்லாதிருந்தும் வான் [illegible] ஆகாயரதத்தில் ஏறாதிருந்தும் தண்ணீர்க்கீழோடி யுத்தக்கப்பல்களை அமிழ்த்தும் கப்பலில் செல்லாதிருந்தும் அங்கிலோராச்சியத்தின் அச்சுவேலிச்சேனைக்கு அதிபதியாயிருந்து நாலுவருடமும் நாவினால் யுத்தஞ்செய்து இதனைப்படையாதிருந்த ஸ்ரீமான் யோண் நாசர் என்பவர் எழுந்து இந்த யுத்தகாரணத்தையும் இதனால் வந்த வருவினைகளையும் சேர்மனியரின் [illegible]யையும் விரித்துரைத்திருக்க, ம. ரா. ரா. ச. சின்னத்தம்பியவர்களெழுந்து "நீதி இராச்சியத்தாரை யாத்தும்" என்னும் நீதிவாக்கை ஆதாரமாய்க்கொண்டு சேர்மனியரின் அகந்தையையும் இங்கிலீஷ் அரசின் நீதியையும் அகந்தையிருந்தவர்த அழிவையுங்கூறி அமர, "கர்த்தாவே எங்களை ஆளும் அரசரைக்காத்திடும்" என்னும் ஞானகீர்த்தனை பாடப்பட வருண்பகவானும் தனது சந்தோஷத்தைக் காண்பிக்க கூட்டம்முடிந்தது.

அதன்பின் மேற்படி வித்தியாதரிசியவர்கள் பாடசாலைப் பிள்ளைகளுக்குச் சந்தோஷத்தையுண்டுபண்ணுமாறு உயரம்பாய்தல், நீளம்பாய்தல், [illegible], [illegible] முதலியவைகளைக் கண்டு [illegible] ஓட்டம் முதலிய விளையாட்டுக்கள் நடத்துவித்து நல்லொழுக்கம் [illegible] முதல் இருவருக்கு முறையே ஒருரூபா, அரைரூபா, கால்ரூபா, பத்துச்சதம், நிறப்பென்சில், [illegible] முதலிய பல்வகை உபகாரங்களை மேற்படி வித்தியாதரிசியவர்கள் கிரமமாயும் கண்ணமாயும் பார்வையிட்டுப் பிள்ளைகளுக்குக்கொடுக்க எல்லாரும் சந்தோஷமுடன்செய்நன்றிகூறி மௌனாத்தியத்துடன் வழிவிட்டடேப்பினர்.

இங்ஙனம்,

E. K. K. அச்சுவேலி.

இலங்கை.

சட்டநிரூபணசபை—சென்ற 13ம் 14ந் திகதிகளில் இலங்கைச் சட்டநிரூபணசபை நடக்கலாயிற்று. நமது புதியதேசாதிபதியவர்கள் யுத்தசமாதானத்தையும் இலங்கையின் பணநிலைமையும் அதனுடன் நடக்கப்படவிருக்கும் சில வரியேற்றங்களையுங்குறித்துப்பேசினர். சபையின் சனப்பிரதிநிதிகளும் ஏனையோரும் யுத்தசமாதானத்தைவிட்ட சந்தோஷத்தை எடுத்துப்பேசினார்கள். கடைசியிலே சட்டநிரூபணசபையார் யுத்தசமாதானத்தைவிட்டு இலங்கையாருடைய மகிழ்ச்சியைக்காட்டி இராசசக்கிரவர்த்திக்குச் சந்தோஷ சோபனத்தந்தியொன்று அனுப்பவேண்டுமென்று தீர்மானித்து அன்றைச்சபையைமுடித்து மறுநாளுக்குத் தவணைபோட்டுவைத்தனர்.

சில புதியவரிகள் ஏற்படுத்தப்பட்டன.

பின்வரும் புதியவரிகள் சபையாரின் அங்கீகாரத்துக்கு வந்தன.

1 இல உறுதிகளின் றெஜிஸ்றர் பீஸையும் முத்திரைவரியைக் கூட்டுதல். இதனாலே வருஷத்திலே வரக்கூடிய வருமானம் 275000 ரூபாய்.

2 பிறதேசங்களிலிருந்துவந்து இறக்குமதியாகும் சிகரற்றின் வரியை ஏற்றல். இதனாலேவரக்கூடிய வருமானம் 200000 ரூபாய்.

3 உள்நாட்டுத் தபால் தந்திச் சலாரையும் பிறநாட்டுத் தபால்சலாரையும் ஏற்றுதல். இதனாலே வரக்கூடிய வருமானம் 370000 ரூபாய்.

4 றெயிற்சலாரையும் அதில் வேறுசில சலார்களையும் ஏற்றுதல். இதனாலே வரக்கூடிய வருமானம் 7[illegible]0000 ரூபாய்.

5 வருகிற 1919ம் தைமீ தொடக்கமாகக் கொப்பறாவுக்கும் தேங்காய் எண்ணெய்க்கும் மறுபடியும் ஏற்றுமதித் தீர்வையை வைத்தல். இதனாலே வரக்கூடிய வருமானம் 2755 00 ரூபாய்.

றப்பரின் ஏற்றுமதித்தீர்வையை நீக்கிவிடத் தீர்மானமாயிற்று.

இவைகளிலே சிலவரிகள் சிலகாலத்தாலே அழிக்கவும் சில நிலைக்கவும்வரும்.

தீவிபத்து—8உ கொழும்பில் [illegible] ரம் அழைக்கப்பட்டுத் தீ அணைக்கப்பட்டது.

மாலைதீவின்கப்பம்—வருடாவருடம் மாலைதீவுச் சுல்தான் செலுத்திவரும் கப்பம் மேரி என்னும் கப்பல்மூலமாய் 22உ கொழும்புக்குவந்து சேர்ந்தது. கொடுக்குந்தினம் குறிக்கப்படவில்லை.

யுத்த தந்தி.

"சிலோன் டைம்ஸ்" "சுதேசமித்திரன்" "ஜயமித்திரன்" "இந்துநேசன்" பத்திரிகைகளினின் றெடுக்கப்பட்டன.

சேர்மனியருக் கிடப்பட்ட யுத்த ஓய்வு நிபந்தனைகள்.

11உ பின்வருபவை சேர்மனிக்கிடப்பட்ட யுத்தஓய்வு நிபந்தனைகள். அவைகள் இன்றுபிற்பகலில் பிரதிநிதிச்சபையில் பிரதமமந்திரியால் வாசிக்கப்பட்டன.

மேற்குப்போர்முகம் சம்பந்தமாயுள்ள
(a) ஏற்பாடுகள்.

1 இந்த யுத்தஓய்வு நிபந்தனைகள் ஒப்பமிட்டு 6 மணிநேரம் கழிந்தபின் தரையிலும் ஆகாயத்திலுஞ் சண்டை நிறுத்தப்படவேண்டும்.

2 படையெழுச்சிசெய்யப்பட்டிருக்கும் பெல்ஜியம், பிரான்சு, ஆல்சேஸ், லோறேன், லக்சம்பர்க் என்னுந் தேசங்களை உடனே காலிசெய்யவும் 14 நாட்களுக்குள் அது முற்றுப்பெறவும் கட்டளையிடப்படவேண்டியது. குறிக்கப்பட்ட காலத்திற்குள் அப்பாகங்களிலிருந்து விலகாத சேர்மன்சேனாவீரர் யுத்தக்கைதிகளாக்கப்படுவர். இப்பகுதிகளில் காலிசெய்யப்படும் இடங்களில் உடனுக்குடனே ஐக்கியகட்சிச்சேனைகளும் அமெரிக்கசேனைகளுஞ் சேர்ந்து சென்று அவ்விடங்களைக் கைப்பற்றுவார்கள். சேர்க்கப்பட்ட 1ம் குறிப்புப்பிரகாரம் காலிசெய்யப்படுவதும் அதைக் கைவசப்படுத்துவதுமான நடவடிக்கைகள் ஒழுங்காய் நடத்தப்படும்.

3 மேற்சொல்லப்பட்ட நாடுகளிலுள்ள சனங்கள் 14 நாட்களுக்குள் விடுவிக்கப்படவேண்டியது. (விசாரணையில் அல்லது குற்றப்படுத்தப்பட்டிருக்கும் யாவருக்கும் பிணையாளிகள் கொடுக்கப்படவேண்டும்.)

4 பின்வரும் யுத்தசாதனங்களைச் சேர்மன்சேனைகள் நல்ல நிலைமையில் ஒப்புக்கொடுக்கவேண்டும். 5000 பீரங்கிகள் (பெரியவை 2500 யுத்தகளப்பீரங்கிகள் 2500) 30000 மெஷின்பீரங்கிகள், 3000 காலாட்சாதனங்கள், 2000 விமானங்கள் (முதலாவது சண்டைசெய்தவைகளும் குண்டுபோடுகிறவைகளும் பின்பு 7 8 டி விமானங்களும் குண்டுபோடும் இராவிமானங்களும்) மேற்சொல்லப்பட்டவை இருக்கின்றவிதத்தேயே ஐக்கியகட்சிச்சேனைகளிடமும் அமெரிக்கசேனைகளிடமும் சேர்க்கப்பட்ட குறிப்பிற்காட்டிய விபரப்படி ஒப்புவிக்கவேண்டியது.

5 றைன்நதியின் இடதுகரையிலுள்ளநாடுகளைச் சேர்மன்சேனைகள் காலிசெய்துவிடவேண்டியது. இவைகள் கைவசப்படுத்தப்பட்டு ஐக்கியகட்சியாருடையவும் அமரிக்க ஐக்கியமாகாணத்தாருடையதுமான சேனைகளின் ஆதிக்கத்தின்கீழ் ஸ்தலஅதிகாரிகளால் நிர்வகிப்பு நடத்தப்படவேண்டும். இந்நாடுகள் ஐக்கியகட்சியாரதும் அமரிக்கஐக்கியமாகாணத்தாரதும் படைகளால் கைவசப்படுத்தப்பட்டு றைன்நதியின் பிரதான பாலத்தை (மேயன்ஸ், கோபிளன்ஸ், கலோன்) யும் இவ்விடங்களில் வலதுகரையில் 30 கிலோமீற்றர் விசாலத்திலுள்ள பாலத்தின் பீடங்களையும் அத்துவிதமாய் அப்பிரதேசங்களிலுள்ள யுத்த விசேஷம் பொருந்திய ஸ்தானங்களையும் கையாட்சிசெய்யவேண்டும். றைன்நதியின் வலதுகரையில் நதிக்கும் ஒல்லாந்து எல்லைமுதல் சுவிற்சலாந்துஎல்லைவரை 10 கிலோமீற்றர் தூரமானபாகத்துக்குமிடையில் ஒரு நடுவுநிலையிடம் ஏற்படுத்தப்படவேண்டும். குடிசனங்கள்விஷயமாய் யுத்தஓய்வுஉடன்படிக்கை ஒப்பமிடுவதற்குமுன் இராணுவசம்பந்தமாய் ஒருவரையாவது குற்றப்படுத்தக்கூடாது. கைத்தொழில் ஸ்தாபனங்களின் மதிப்புக்குறைவுபடவோ அவைகளின் வேலையாட்கள் குறைவுபடவோ தக்கதாய்ப் பொதுவான அல்லது உத்தியோகமுறையான ஒழுங்குகள் செய்யப்படக்கூடாது. றைன்நாடுகளைச் சத்துருக்கள் காலிசெய்வதானது 11 நாட்களுக்குள்ளாக அல்லது உடன்படிக்கைக்கு ஒப்பமிட்டதிலிருந்து மொத்தம் 25 நாட்களுக்குள் நிறைவேற்றப்படவேண்டியது. காலிசெய்யப்படுவதும் கைவசப்படுத்தப்படுவதுமான நடவடிக்கைகள் சேர்க்கப்பட்ட 1ம் குறிப்பின்படி கிரமப்படுத்தப்படுவதாகும்.

6 சத்துருக்கள் விட்டு நீங்கிப்போகும் இடங்களிலெல்லாம் சனங்கள் விட்டுவிலகவேண்டியதில்லை. அவ்விடத்து மனிதர்களுக்காவது அவர்களது உடைமைகளுக்காவது யாதொருதீங்கு அல்லது துன்பஞ்செய்யலாகாது. யாதொருவிதமானகெடுதியும் விளைக்கக்கூடாது. எல்லாப் போர்த்தான கட்டுமானங்களும் கையாட்சிக்கு விடப்படுவதற்றவிர யுத்தவேலைக்கான தளவாடங்களும் ஆகாரசாதனங்களும் வைத்திருக்கும் ஸ்ரோர்களும் அவ்விதமே விடப்படவேண்டும். விட்டுநீங்கிச்செல்வதற்காகத் தீர்மானப்படுத்தப்பட்டிருக்கும் காலவளவிற்குள் நீக்கப்படாத உத்தியோகஸ்தர்களின் ஆகாராதிகள் வைத்திருக்குமறைகள் ஆடுமாடுகளுக்கான தொழுவங்கள் முதலியவைகள்முன் நிர்மிக்கப்பட்டிருந்தவிதத்திலேயே விட்டுப்போகவேண்டும். கைத்தொழிற்சாலைகள் ஒருவிதத்திலுங் குற்றஞ்சாட்டப்படமாட்டா. அன்றியும் அவற்றின் சொந்தக்காரர்கள் தள்ளப்படமாட்டார்கள்.

7 ரோட்டுகள் வேறேந்தப் போக்குவரத்துப் பாதைகள் றெயிற்பாதைகள் தண்ணீர்ப்போக்குவரத்துக்கால்வாய்கள் முக்கியபாதைகள் பாலங்கள் தந்தி டெலிபோன் முதலியவைகளுக்கு யா[illegible] அவைகளில் வேலைசெய்துவரும் எல்லா யுத்தவீரர்கள் மற்ற உத்தியோகஸ்தர்கள் முதலியவர்கள் மேற்படி தொழில்களையே பார்த்துவரவேண்டும். பெல்ஜியம் லக்சம்பர்க் ஆகிய இரண்டுதேசங்களையும்விட்டு விலகிக்கொள்ள ஏற்படுத்தப்பட்டிருக்கும் காலஅவதிக்குள் 5000 றெயில் இயந்திரங்கள் 15000 சாமான்வண்டிகள் 5000 மோட்டர்லோரிவண்டிகளான இவைகளெல்லாம் அவ்வவற்றிற்குரிய தட்டுமுட்டுச்சாமான்களோடுகூட ஐக்கியதேசத்தவர்களின் கைவசம் ஒப்புவிக்கவேண்டியது. அல்சேஸ் லோரேனிலுள்ள எல்லா றெயிற்பாதைகளும் மற்றுஞ்சாதனங்களும் அவ்விடத்துத் தொழிலாளிகளும் மற்றமுன்பிருந்தனவோடு திருப்பிக்கொடுக்கவும்வேண்டும்.

மேலும் றைன்நதியின் இடப்பக்கங்களில் உபயோகத்திற்கான றெயிற்சாதனங்களும் அவ்விடங்களிலேயே விட்டுவிடப்படவேண்டும். நிலக்கரி ஸ்ரோர்களும் மற்றுஞ்சாதனங்களும் சிக்னல்களை பழுதுபார்க்குமிடங்கள் இவைகளும் யுத்தஓய்வுகாலத்தில் சேர்மனி எந்தநிலைமையில் வைத்துச் சொந்தநாட்டோடுள்ள சமாச்சாரப் போக்குவரத்தை நடத்திவந்ததோ அதுபோலவே அவைகளை விட்டுவிட்டுப் போகவேண்டும். ஐக்கியதேசத்தவரிடமிருந்து சேர்மனியர் கைப்பற்றிய படுகலன்களைத்தையும் திருப்பக் கொடுத்துவிடவேண்டும். 2ம் இலக்கமிட்ட குறிப்பிலிருந்து விபரங்களறிந்துகொள்ளவும்.

8 சேர்மனியர்விட்டுப் பின்போகுமிடங்களிலுள்ள சுரங்கம் முதலியவற்றைக் கண்டுபிடிக்கவேண்டியபொறுப்புச் சேர்மன்மேலதிகாரிகளைப்பொறுத்ததேயாகும். மேலும் அவர்கள் அவற்றைக் கண்டுபிடித்தற்கான உதவிகளுஞ்செய்யக் கடமைப்பட்டவராவர். மேலும் சேர்மன அதிகாரிகள் கெடுதிவிளைவிக்கவேண்டியமுறைகள் (விஷக்காற்று விஷநீர் முதலியவற்றை) தாங்கள் உபயோகித்துவந்ததின் பிரதியுபகாரமாக அவைகளை இப்பொழுது வெளிப்படுத்தப்படவேண்டும்.

9 ஆக்கிரமிக்கப்பட்ட இடங்களில் அதிகாரம் வகித்த உத்தியோகஸ்தர்களால் கணக்கு முடிவுசெய்வதைத்தவிர மற்ற அதிகார உரிமைகளெல்லாம் ஐக்கியகட்சியார் அமரிக்கா முதலிய தேசங்களின் சேனைகளுக்கே உடைத்தாயிருக்கும். அல்சேஸ் லோரேன் பகுதிகளைத்தவிர மற்றைய நாடுகளிலிருக்கும் சேனைகளின்செலவெல்லாம் சேர்மன் அரசே பொறுக்கும்.

10 குறிப்பிடப்போகும் நிபந்தனைகளின்படி யுத்தத்திலபிடித்த ஐக்கியகட்சியாரின் கைதிகளையும் அமரிக்ககைதிகளையும் உடனே விட்டுவிடவேண்டியது. ஐக்கியராச்சியங்களும் அமரிக்காவும் இக்கைதிகளைத் தங்களிடம்வைத்துச் செய்வார்கள். இருந்தபோதிலும் சேர்மன் யுத்தக்கைதிகளாகிய ஒல்லாந்து சுவிற்சலாந்து முதலியதேசங்களில் வைக்கப்பட்டிருப்பவர்களைத் திரும்பக்கொடுப்பது இதற்குமுன் நடந்ததுபோலவே நடக்கும். யுத்தத்திலபிடித்த சேர்மன்கைதிகளைவிடுவது சமாதானகூட்டத்தில் முடிவாகச்செய்யப்படும்.

11 காலிசெய்யப்பட்ட இடங்களிலிருந்து கொண்டுபோகமுடியாத நோயாளிகளையும் காயமடைந்தவர்களையும் அவ்விடங்களில்விடப்பட்டிருக்கும் சேர்மனியர்கள் கவனித்துவரவேண்டும். அவர்களுக்குவேண்டிய வைத்தியசாமான்கள் கொடுக்கப்பட்டிருக்கும்.

b. வதப்புப்படி நிபந்தனைகள்.

சேர்மனியின் கிழக்கெல்லையிலுள்ளவைகளின் சம்பந்தமாக:

12 யுத்தத்திற்குமுன் ருஷிய ருமேனியா துருக்கி முதலியதேசங்களுக்குச் சொந்தமாயிருந்த எப்பகுதியிலுமிருக்கும் சேர்மனசேனைகளைச் சேர்மன்எல்லைக்குள் வரவழைத்துக் கொள்ளப்பட்டு அத்தேசங்கள் 1914ம் ஆவணிமீ 1உ யிலிருந்ததுபோலிருக்கவேண்டும். முன் ருஷியாவுக்குச் சொந்தமாயிருந்த பாகங்களில் தற்காலமிருக்கும் சேர்மன்சேனைகளை மேற்சொன்னவாறு சேர்மன்எல்லைக்குள் அப்பகுதிகளில் நிலைமைகளைக்கவனித்து எப்பொழுது ஐக்கியகட்சியார்கள் தகுந்த தருணமென்று கருதுகிறார்களோ அத்தருணமே வரவழைத்துக்கொள்ளவேண்டியது.

13 சேர்மனியசேனைகள் உடனே காலிசெய்ய ஆரம்பிக்கவேண்டும். (1914ம் ஆவணிமீ 1உ யன்று விளக்கிக்காட்டியதுபோல்) தற்காலம் ருஷிய பகுதிகளிலிருக்கும் சேர்மன் போதகர்களும் கைதிகளும் ராணுவஉத்தியோகஸ்தர்களும் சிவில் உத்தியோகஸ்தர்களும் உடனே திரும்பவரவழைக்கப்படவேண்டும்.

14 ருமேனியாவில் 1914ம் ஆவணிமீ 1உ சொல்லியபிரகாரம் சேர்மன் ஆகாராதிவிஷயங்களுக்காகக் கேட்டல் அபகரித்தல்முதலிய எவ்விதமான செயல்களையும் சேர்மன்சேனைகள் உடனே நிறுத்தவேண்டும்.

15 புக்காரஸ்டு பிறெஸ்டிலிட்டோவ்ஸ்கு முதலியவிடங்களில்செய்த சமாதானங்களும் அதைத்தொடர்ந்து நடந்த சமாதானங்களும் தள்ளப்படல்வேண்டும்.

16 கிழக்கில் சேர்மனியர் காலிசெய்தவிடங்களில் ஐக்கியகட்சியார் அங்குள்ள சனங்களுக்கு ஆகாராதிகள் கொடுத்துதவுவதற்காவது சச்சரவுகளில்லாமல் காப்பதற்காவது டான்சிக் மூலமாகவாவது விஸ்டுலாவழியாகவாவது செல்லவும் அதிக்கப்பெறவேண்டும்.

c. வதப்புப்படி கிழக்காபிரிக்கா சம்பந்தமாகவுள்ள நிபந்தனைகள்.

17 ஒருமாதகாலத்திற்குள் கிழக்காபிரிக்காவில் போர்நடத்திக்கொண்டிருக்கும்சேனைகள் யாதொரு நிபந்தனையுமில்லாமல் காலிசெய்துவிடவேண்டியது.

d. வதப்புப்படி பொதுநிபந்தனைகள்.

18 அதிகமாகப்போனாலும் ஒருமாதத்திற்குள் இனி விபரமாய்க் குறிப்பிடப்போகும் நிபந்தனைக்கொப்பப் பாதுகாப்பிலிருக்கும் அல்லது அன்னியநாட்டிற்கனுப்பியிருக்கும் எல்லாச் சிவில்உத்தியோகஸ்தர்களையும் அவர்கள் ஐக்கியகட்சியாரைச் சேர்ந்தவர்களாயிருந்தாலுஞ்சரி அல்லது 3வது வகுப்பு நிபந்தனைகளில் சொல்லியதைவிட கூடச்சேர்ந்த மாகாணங்களிலுள்ளவர்களாயி[illegible] விட்டுவிடவேண்டியது.

19 ஐக்கியகட்சியாரும் அமரிக்கரும் [illegible]ப்படுத்தாமலிருக்கும் உரிமைகளையும் கேள்விகளையும் பாதகப்படுத்தாமலிருப்பதோடு பணவிஷயமாக அடியிற்குறிப்பிடும்நிபந்தனைகளிருக்கவேண்டும். நஷ்டஈடு கொடுக்கப்படவேண்டும். சண்டை நிறுத்துங்காலத்தில் ஐக்கியகட்சியார் யுத்தநஷ்டப்பெறுவதற் கறிகுறியாயிருக்கவேண்டிச் சேர்மனியர் பொதுப்பிணைகளை எடுத்துக்கொள்ளக்கூடாது. பெல்ஜியத்திலுள்ள பாங்குகளிலிருந்து எடுக்கப்பட்ட பணம் கோட்டுகள் தஸ்தாவேஜுகள் முதலியவை உடனே திருப்பிக்கொடுக்கப்படவேண்டும். ருஷியாவிலிருந்தும் ருமேனியாவிலிருந்தும் சேர்மனியரால் எடுக்கப்பட்ட தங்கம் கொடுக்கப்படவேண்டும். சமாதானம் கையொப்பமாகும்வரை ஐக்கியகட்சியாரிடம் மேற்படி தங்கம் நம்பிக்கொடுக்கப்பட்டிருக்கவேண்டும்.

e. வதப்புப்படி கடற்படைநிபந்தனைகள்.

20 கடற்சண்டைகள் உடனே முடிவுபெறவேண்டும். சேர்மன்கப்பல்கள் தங்கியிருக்கும் விஷயத்தைப்பற்றியும் அவைகளின் போக்குவரத்து விஷயங்களைப்பற்றியும் உறுதியான தகவல் கொடுக்கப்படவேண்டும். எக்கடலிலும் வியாபாரக்கப்பல்களும் கடற்படைக்கப்பல்களும் போர்க்காரச் சர்த்தாருடையதென்று நடுவுநிலைமைத்தேசங்கள் அறிவிக்கப்படவேண்டும்.

21 யுத்தத்தில் பிடிக்கப்பட்ட ஐக்கியகட்சியாருடையவும் இதரதேசங்களுடையவும் கப்பற்படைக் கைதிகளையும் வியாபாரக்கப்பல்களிலுள்ள கைதிகளையும் விட்டுவிடவேண்டும்.

22 நமது விருப்பங்களுக்கேற்ற நிபந்தனைக்கு பின்வருமாறு அமைத்தப்படும்.—ஐக்கியகட்சியாரிடமும் அமரிக்கரிடமும் உடன்உபயோகத்திற்குத் தயாராயிருக்கும் எல்லா நீர்மூழ்கிக்கப்பல்களையும் (சங்கிலிகளும் [illegible]உட்பட) ஐக்கியகட்சியாரும் அமரிக்கரும் குறிப்பிடுந்துறைமுகங்களில் ஒப்புவிக்கவேண்டும். மேற்படியாரின் பரிசோதனையின்கீழிருக்கும் சேர்மன்துறைமுகங்களில் தற்காலம் கடலில் செல்லத் தயாராயிருக்கும் நீர்மூழ்கிக்கப்பல்களும் [illegible] உத்தரவு குறிப்பிட்ட துறைமுகத்திற்குப்போக உத்தரவுக்கவுடன் புறப்படவும் மற்றவைகள் கூடியசீக்கிரம் புறப்படவுந் தயாராயிருக்கவேண்டும். யுத்தநிறுத்தப்பத்திரத்தில் கையொப்பமிட்டு 14 நாட்களுக்குள் இந்நிபந்தனை பாலனைக்குவரவேண்டும்.

23 பின்சொல்லப்படும் சேர்மனிய மேலோடும் யுத்தக்கப்பல்கள் ஐக்கியகட்சியாரதும் அமரிக்க ஐக்கியமாகாணத்தாரதும் பெயரால் உடனே யுத்தஆயுதங்கள் நீக்கப்பட்டுப் பின்பு நடுவுநிலைமைத்துறைமுகங்களில் காவலுக்குள்ளடக்கப்படும். அவைகள் தவறப்படுமாயின் ஐக்கியகட்சியாராலும் அமரிக்கராலும் அவர்களுடைய சொந்தத்துறைமுகங்களையே இதற்கென்று குறிப்பிடப்பட்டு ஐக்கியகட்சியாரதும் அமரிக்கரதும் விசாரணையில் வைக்கப்படும். அவைகளைக் கவனிக்கவேண்டியவர்கள்மட்டும் அவைகளில் வைக்கப்படுவார்கள். அந்த யுத்தக்கப்பல்களின் விபரமாவது; [illegible] யுத்தக்கப்பல்கள் 6, சண்டைக்கப்பல்கள் 10, கி

றுத்தமான குரூசர்கள் 8. அதில் 2 சாலை விறைக்கும்கப்பல்களும் 50 நற்கால யாதிரியான நாசகாரிக்கப்பல்களும் அமையும், மற்றும் எல்லா மேலோடுங்கப்பல்களும் (கவிழ்ந்துசெல்லுங்கப்பல்களுட்பட) ஐக்கியகட்சியாராலும் அமரிக்காரராலும் அசிர்தமுகொள்ளத்தக்கதாக அதாவது செர்மனிய ஆதாவு ஸ்தானங்களில் கட்டப்படவேண்டிய மாத்திரமல்ல, அந்தஸ்தானங்களுக்குச் செலுத்தப்படவேண்டிய தொகையையுங்கொடுத்து முற்றும் நிராயுதபாணியாக்கப்பட்டு ஐக்கியகட்சியாரதும் அமரிக்காரதும் மேல்விசாரணையில் வைக்கப்படவேண்டும். இணைப்படையைச்சேர்ந்த எல்லாகப்பல்களும் (குரூலர்கப்பல்கள் மோட்டார்கப்பல்கள்முதலியன) நிராயுதபாணிகளாக்கப்படவேண்டும். காவலுக்குவைக்கப்படவேண்டியதாய்க் குறிக்கப்படுங்கப்பல்கள் யாவும் உடன்படிக்கை யொப்பமிட்ட 7 நாட்களுக்குப்பின் செர்மன்துறைமுகங்களைவிட்டுப் புறப்பட ஆயத்தமாயிருக்க வேண்டும். அவைகள் செல்லவேண்டியதிசை தந்தியில்லா வர்த்தமான சாதனம்மூலம் அறிவிக்கப்படும்,

(ஐக்கியகட்சியாரது பிரதிநிதிகளால் ஒருவிளம்பரம் கையொப்பமிடப்பட்டுச் செர்மன்பிரதிநிதிகளுக்குக் கையளிக்கப்பட்டது. அதில் கப்பற்படையின் கலகமியித்தம் மேற்படிகப்பல்கள் கையளிக்கப்படாவிட்டால் யுத்தஓய்வு நிபந்தனைகளைச் சட்டமாய் நிறைவேற்றுவதற்காகச் ஹெலிக்கோலண்டைக் கைவசப்படுத்திக்கொள்ள ஐக்கியகட்சியார் அதிகாரமுடையராயிருப்பர் என்று அதில் காட்டப்பட்டிருக்கின்றன. இதை ஒப்புக்கொள்ளும்படியாக சான்ஸலர் அவர்களிடம் சிபாரிசுசெய்வோமென்று ஒருஅறிக்கையில் செர்மன்பிரதிநிதிகள் கையொப்பமிட்டனர்.)

24 செர்மன்தேசத்துக்குச் சம்பந்தமான கடல்களுக்கு வெளியேயுள்ள செர்மனியரின் சரக்குகள் குவிக்கப்பட்டதான கடற்பகுதிகளில் சரக்குகளை எடுப்பதற்கும் மற்றுந் தடுப்புகளுக்கு கடக்கும் ஐக்கியகட்சியாருக்கும் அமரிக்கருக்கும் அதிகாரமுண்டு. இப்படிப்பட்ட இடங்கள் காண்பித்துக் கொடுக்கப்படவேண்டும்.

25 பால்டிக்கடலில் ஐக்கியகட்சியாரதும் கூட்டுஅதிகாரங்களதும் கடவிராணுவக் கப்பல்களும் வியாபாரக்கப்பல்களும் போவதும் வருவதுமான சுதந்திரம் அளிக்கப்படவேண்டியது. இதற்குப் பலமாகக் காட்டிகட் கடலிலிருந்து பால்டிக்கடலுக்குச்செல்லும் பிரவேசபாதத்திலுள்ள எல்லாச் செர்மனிய துறைமுகங்களையும் கொத்தளங்களையும் பீரங்கிநிலைகளையும் அரண்களையும் கையாட்சிசெய்யவும் சுவிவுலேலைப்பேச்சுகள் யாதொன்றுமின்றிச் செர்மன்தேச சம்பந்தப்பட்டதான கடல்களிலும் அவைகளுக்கு வெளியாகவுமிடப்பட்ட எல்லாச் சுரங்கங்குண்டுகளையும் தடைகளையும் அறிந்தெடுக்கவும் ஐக்கியகட்சியாருக்கும் அமரிக்கருக்கும் அதிகாரங்கொடுக்கவேண்டியதும் இப்படிப்பட்டஇடங்கள் தெரிவிக்கப்படவேண்டியது.

26 ஐக்கியகட்சியாராலும் கூட்டதிகாரங்களாலும் தற்சமயமிருக்கின்ற முற்றுகையிப்பு முறைகள் மாற்றப்படாதிருக்கும். கடலில் காணப்படும் செர்மன் வியாபாரக்கப்பல்கள் யாவும் பிடிக்கப்படவேண்டியதாயிருக்கும். யுத்தஓய்வுதவணை பரியந்தம் அவசியப்படுமென்றுகண்டால் செர்மனிக்கு ஆகாரவகைகள் அளிக்கும்படியாக ஐக்கியகட்சியாரும் அமரிக்கரும் ஆலோசிக்கின்றனர்.

27 செர்மனிய கடலயுத்தத்திற்கான ஆகாயவிமானங்கள் முதலியவைகள் ஐக்கியகட்சியாரும் அமரிக்கரும் கூறுகிறபடி செர்மனியருடாக்களில் கொண்டுபோகப்பட்டுப் போர்க்கோலங்களழித்து நிறுத்திவைக்கவேண்டும்.

28 பெல்ஜியக் கரைகளைவிட்டுச் செல்லுகையில் செர்மனியர் தாம் அவ்விடங்களில் உபயோகப்படுத்திவரும் வியாபாரக்கப்பல்கள் கப்பல்சாதனங்கள் பாய்க்கப்பல்கள் கிரேன்கைகள் துறைமுகத்தளவாடங்கள் மற்றும் உள்ளூர்க் கப்பல்களோட்டும் கருவிகள் ஆகாயவிமானங்கள் ஆகாயக்கப்பலுக்கான சகலதளவாடங்கள் ஸ்டோர்கள் எல்லாப் போர் உடைகள் ஆயுதங்கள் முதலியன அனைத்தையும் விட்டுச்செல்லவேண்டும்,

29 கருங்கடலிலுள்ள எல்லாத் துறைமுகங்களையும் செர்மனி காலிபண்ணிக்கொள்ளவேண்டும். செர்மனியர் கருங்கடலில் பிடித்திருக்கும் எல்லா ருஷியதேசத்து யுத்தகப்பல்களையும் ஐக்கியகட்சியாரிடமும் அமரிக்கரிடமும் ஒப்புவிக்கவேண்டியது. நடுவுநிலைமைத்தேசங்களைச்சேர்ந்த பிடிக்கப்பட்டிருக்கும் எல்லாக்கப்பல்களையுந் திரும்பக் கொடுக்கவேண்டும். மேலும் யுத்தத்தளவாடங்கள் முதலிய அசைந்துறைகளிலிருந்து செர்மனியர் கைப்பற்றியவைகளையெல்லாம் திருப்பிக்கொடுப்பதுந்தவிர 287 வது நிபந்தனையிற் குறிப்பிட்டபடி செர்மனிய தளவாடங்களையுங் கொடுக்கவேண்டும்.

30 ஐக்கியதேசத்தார்க்கும் மற்றுமுள்ள அவரைச்சேர்ந்தவருடையவும் சொந்தமான செர்மனியரால் கைப்பற்றப்பட்ட வியாபாரக்கப்பல்கள் அனைத்தையும் ஐக்கியதேசத்தவரும் அமரிக்கரும் குறிப்பிடும் துறைமுகங்களிற்கொண்டுபோய் யாதொரு பிரதிபலனுமின்றிச் சேர்த்துவிடவேண்டும்.

31 ஒருதேசத்தைவிட்டுத் திரும்பிச்செல்லல், சரணடைதல் அல்லது திருப்பிக்கொடுத்தல் ஆகிய இவற்றிலொன்று நடைபெறுவதற்குமுன்னதாக யாதொரு கப்பல் அல்லது தளவாடங்களை நாசம்பண்ணக்கூடாது.

32 எல்லாப் பொதுநிலைமைத்தேசங்களையும் விசேஷித்த நோர்வே சுவீடன் டென்மார்க் ஒல்லாந்து இத்தேசங்களை அவர்களது வியாபாரவிஷயமாகச் செர்மனியஅரசாட்சி அல்லது வேறெந்த சுயாதீனமுடையவர்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் நிபந்தனைகளை வேறெவ்வித கப்பல்கட்டும் சாதனங்களை முதலியவற்றிற்கான தனிச்சுதந்திரங்களாகிய இவ்வளவையெல்லாம் இப்பொழுதே நீக்கிவிடப்பட்டதாக அறிவிப்புப்பத்திரம் கொடுக்கவேண்டும்.

33 யுத்தஓய்வு நிபந்தனைகள் கையொப்பமிடப்பட்டதும் செர்மனிய வியாபாரக்கப்பல்களிலொன்றையாயினும் அவர்கள் பொதுநிலைமைத்தேசங்களுக்கு மாற்றிக்கொடுக்கலாகாது.

யுத்தஓய்வு நிபந்தனைகளைப்பற்றிக்கூறும் F வகுப்புகள்.

34 யுத்த ஓய்வுகாலம் 36 ஆகும். ஆனால் அதை இன்னும் தேவையாயின் கூட்டவுங்கூடும். இக்காலத்தினிடையில் மேற்குறித்த நிபந்தனைகளில் யாதாமொன்றை நிறைவேற்றத் தவறுமாயின் இருகட்சியாரில்ஒருவர் மறுகட்சிக்கு 48 மணிநேரம் நோட்டீஸ்கொடுத்து இந்த யுத்தஓய்வு நிபந்தனைகளை அமைவொடுக்கிவிடலாம்.

மறுபடிகொடுக்கவேண்டும் காலவரையைக் குறிக்கும் G வகுப்புகள்.

35 இந்த யுத்தஓய்வு நிபந்தனைகள் செர்மனியரால் ஒப்புக்கொண்டோ அல்லது மறுக்கப்பட்டோ 72 மணிநேரத்திற்குள் பதிலளிக்கவேண்டும்.

11௳ யுத்தநிறுத்த உடன்படிக்கையின் மற்றப்பகுதிகள் இவையாகுமென்று பிரதானமான மந்திரி அறிவித்துவிட்டார். அவையாவன;—

ரைன்நதியின் வலதுகரையிலுள்ள ஒருகுறிப்பிட்ட எல்லையைப் பொதுஇடமாகப்பாவிக்கவேண்டும். யுத்தநிறுத்த உடன்படிக்கைக்குமுன் இராணுவநடவடிக்கைகளில் கலந்துகொண்ட சனங்களை எவ்விதத்திலும் செர்மனி உபத்திரவப்படுத்தக்கூடாது. செர்மனியர் அதிக்கும் இடங்களிலுள்ள சனங்களுக்கு எவ்விதகேடும் விளைக்கக்கூடாது. நிபந்தனைகாலத்துக்குள் இராணுவசாமான்கள் எதையும் அப்புறப்படுத்தக்கூடாது. அல்சேஸ் லோரேனிலுள்ள றெயில்வேகள் ஐக்கியசேனையாரிடம் ஒப்படைக்கப்படவேண்டும். அமரிக்க சேனைகளுக்கும் ஐக்கியசேனைகளுக்கும் எல்லா இடங்களிலும் சகல சௌகரியங்களுஞ் செய்துகொடுக்கவேண்டும். அடுத்த இரண்டுவாரங்களுக்குள் கப்பல்கள் சப்மரின்கள் விமானங்கள் முதலியவைகளைக் கேட்டதொகையளவு கொடுத்துவிடவேண்டும்.

12௳ செர்மனிய பிறதேசகாரிய மந்திரியான டாக்டர் சால்ப் அமரிக்க அரசாட்சிக்குப் பின்கண்டபடி சந்தியனுப்பியிருக்கிறார்.

பிரசாதிபத்தியத்தின் நோக்கங்கள் மேன்மையானதென்பதையுணர்ந்து செர்மனிய அரசாட்சியானது பிரசாதிபதி வில்சன் வெகுநாட்களாய்ச் சித்தாந்தஞ்செய்துகொண்டுவந்த நியமங்களின் மீது சமாதானத்தைநாட முற்பட்டது. சகலதேசங்களுக்கும் உண்மையான நேசபான்மையை உண்டுபண்ணிவைக்கவேண்டுமென்பதே பிரசாதிபத்தியத்தின் நோக்கமாகும். செர்மனிய சனங்கள் மீது தாம் யுத்தந்தொடுக்க விரும்பவில்லையென்றும் செர்மனியின் அபிவிருத்திக்குப் பங்கமிழைக்கவேண்டுமென்பதும் தமது நோக்கமல்லவென்றும் பிரசாதிபதி வில்சன் பன்முறை கூறியிருக்கின்றார்.

சண்டையை நிறுத்திக்கொள்வதற்காக ஐக்கியதேசங்கள் ஏற்படுத்திய நிபந்தனைகளின் பத்திரம் செர்மனியஅரசுக்கு இப்பொழுது கிடைத்திருக்கின்றது. 50 மாதங்களாகச் செர்மனிக்கு வெளியூர்களிலிருந்து சாமான்கள் வரவொட்டாமல் ஐக்[illegible] கடலடைப்பு ஏற்படுத்திவருகின்றனர். இப்பொழுதோ செர்மனியசனங்களுக்கும் சேனைகளுக்கும் வேண்டிய சாதனங்களை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குக் கொண்டுபோவதற்குற்ற ரெயில்வண்டித்தொடர் கப்பல்கள் முதலியனவற்றைச் செர்மனி ஐக்கிய தேசங்களிடம் ஒப்படைத்துவிடவேண்டுமென்று நிபந்தனை விதிக்கப்பட்டிருக்கின்றது. இக்கடின நிபந்தனைகளால் செர்மனியில் லட்சக்கணக்கானசனங்கள் பசியினால் வருந்த நேரிடும். குழந்தைகளும் ஸ்திரீகளும் பஞ்சத்திற்கிரையாவார்கள். ஐக்கியதேசங்கள் இனியும் கடலடைப்பை நிறுத்தவில்லையென்றும் விதிக்கப்பட்டிருக்கின்றது. இத்தகைய நிபந்தனைகளை நாங்கள் ஏற்றுக்கொள்ளத்தான்வேண்டியிருக்கின்றது. ஆனால் ஒருவிஷயத்தை நாங்கள் பிரசாதிபதி வில்சனுக்குச் சொல்ல விரும்புகின்றோம். அதாவது இத்தகைய நிபந்தனைகளைச் செர்மனிக்கு விதிப்பதால் உலகத்திலே எக்காலும் சமாதானம் நிலைபெற்றிருப்பதற்கு அத்தியாவசியமான உண்மையான நேசஉணர்ச்சி ஏற்படாமற்போகுமென்பதேயாகும். ஆகையால் இந்த நெருக்கடியானசமயத்தில் செர்மனிக்கு விதிக்கப்பட்டிருக்கும் இந்தப் பயங்கரமான நிபந்தனைகளை மட்டுப்படுத்தப் பிரசாதிபதி வில்சன் முயற்சிசெய்யவேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொள்ளுகிறோம்.

பிரசாதிபதி வில்சன் சமாதான உடன்படிக்கை ஆலோசனையிற் கலந்துகொள்ளுவார்.

19௳ சமாதான உடன்படிக்கையின் பிரதான பாகத்தை திட்டப்படுத்துவதற்குள்ள ஆலோசனைகளிற் கலந்துகொள்வதற்காக பிரசாதிபதி வில்சன் எண்ணியிருக்கின்றனரென்றும் அநேகமாய் அவருடன் அவசியமாய் ஆலோசிக்கப்படவேண்டுமென்றும் உத்தியோகமுறையாய்த் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஐக்கியமாகாணப் பிரதிநிதிகளாயிருப்பதற்காகவுள்ள பிரதிநிதிகளுடன் பிரசாதிபதி கூடிவருவார் காங்கிரஸ்சபை முடியும்வரை அவர் பிரசன்னமாயிருப்பார் எனயதுதிட்டமல்ல மார்கழி 2 ம் தேதி காங்கிரஸ்சபை கூடியதற்கு சற்றுப்பின்பு பிரசாதிபதிவில்சன் பரிசுக்குப்போவார்.

20௳ சமாதானக்கூட்டத்தின் கடைசியில் விருத்தப்பாகம் முடியுமட்டும் பிரான்ஸ்தேசத்திலிருக்க பிரசாதிபதிவில்சன் தீர்மானித்திருக்கிறார். சுயாதீனத்தைப்பற்றிய விஷயத்தில் அவர் விசேஷித்த அக்கறை கொண்டிருக்கிறார்.

யுத்தசமாதானம்.

16௳ யுத்தஓய்வு நிபந்தனைகள் யாதொருதடையின்றி இயல்பான விதியில் நிறைவேற்றப்படுகின்றன. கைவசப்படுத்தப்பட்ட நாடுகளைக் காலிசெய்யும் விஷயமாயும் யுத்ததளவாடங்களை ஒப்புவிக்கும்விஷயமாயுமுள்ள வகுப்புகளுக்கு இணங்கிவிட்டபடியால் அதின்படி நடத்தப்படுபவைகள் முதலாவது எதிர்பார்த்ததைவிட மிகவும்துரிதமாய் நடத்தப்படக்கூடியதாயிருக்கின்றன.

பெல்ஜியப்பகுதியானது முற்றும் காலிசெய்யப்பட்டது. பிரான்சியநாட்டில இப்போது சத்துருக்களில்லை.

செர்மன் வேண்டுகோள்.

11௳ யுத்தஓய்வு நிபந்தனைகளின் தணிவு செய்யும்படியாக செர்மன் ஸ்திரீகளால் கொடுக்கப்பட்ட வேண்டுகோள் உலகமெங்கும் தந்தியில்லாச்சாதனம் வழியாக அனுப்பப்பட்டிருக்கிறது. செர்மனியக்கத்தோலிக்கர் பாப்பானவருக்கு அநேகமாயுள்ள வேண்டுகோள் அனுப்பியிருக்கின்றனர். வழியடைப்பின் எதுவாதுண்டாகும் பட்டினியைமுன்னிட்டு அதைக்கண்டித்துசோசியலிஸ்டுகட்சியார் சுவீடனிலுள்ள அன்னியோன்னிய கட்சியாரான பிருண்டிங்குக்குத் தந்தியனுப்பி அக்கண்டிப்பைப்பற்றி எல்லாத்தேசங்களிலுள்ள தொழிலாளருக்கும் திரும்பஅறிவிக்கும்படியாகக் கேட்டிருக்கின்றனர். பிருண்டிங் அவ்விதமே அதைப்பற்றித் தெரிவித்துக்கொண்டிருக்கிறார். மெஸ். ஆர்தர் ஹெண்டர்சன் அதற்கு சார்பாயிருக்கிறார். செர்மனியில் பிரசித்தஞ்செய்யப்பட்டு ஸ்காண்டிநேவியா வழியாக அனுப்பப்பட்டதான யுத்த நிபந்தனைகளைப்பற்றியதான செர்மனிய விதிகளில் ஐக்கியகட்சியார் செர்மனிக்கு [illegible] மளிப்பதைப்பற்றியுள்ள உறுதிவாக்கினை [illegible]ர்கள் கூறுதவிட்டனரென்று லண்டனில் [illegible] காட்டப்பட்டிருக்கிறது.

நிபந்தனைகள் தணிவுசெய்யப்படவேண்டும்.

18௳ யுத்தநிபந்தனைகள் தணிவுசெய்யப்படுவதற்காகச் செர்மனிய அரசாட்சியாரின் வேண்டுகோளுக்குப்பதிலாக இனிமேல் அவர்கள் அநுவிஷயமாய் அமரிக்கஅரசாட்சிக்குமட்டுமல்ல வழக்கப்படியுள்ள ஸ்தானபத்திய மார்க்கமாய் எல்லாக்கூட்டு அரசாட்சியாரிடமும் கேட்டுக்கொள்ளவேண்டுமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

செர்மன் யுத்தக்கப்பல்கள் சரணடைதல்

16௳ பிரித்தானியரிடம் சரணடைந்த யுத்தக்கப்பல்களின் ஜாபிதாவை பெர்லின்அறிக்கை வெளியிட்டிருக்கிறது. அது முன்வெளியாக்கப்பட்டதற்குச் சரியாயிருக்கிறது. கார்த்திகை மீ 18 ம் தேதி காலை 5 மணிக்குப்பிந்தாமல் அவைகள் பயணமாக வேண்டுமென்று ஒப்பந்தப்படுத்தப்பட்டிருக்கின்றன. அவைகள் குறைந்தபட்சம் ஆட்களேற்றப்பட்டுக் குண்டுகளற்றவையாயிருக்கும்.

யூப்போட்டுகள் இங்கிலாந்துக்குச் செல்லுகின்றன.

16௳ இங்கிலாந்துக்குச்செல்லும் யூப்போட்டுகளை நடத்தும்படியாக பர்லின்சோவியட் கட்சியார் சப்மரின் ஆட்களிடம் வேண்டியிருக்கின்றனர் அவர்கள் பத்திரமாய்ப்போய்ச்சேரவும் காபந்தில் வைக்கப்படாமலிருக்கவும் சோவியட்கட்சியார் உறுதிகூறி உயிர்மோசங்களுக்கு உத்திரவாதஞ்செய்வதாகவும் தகுந்தசன்மானம் அளிக்க ஏற்பாடுசெய்வதாகவும் வாக்களித்தனர்.

17௳ ரோசைத்தென்னுமிடத்தில் செர்மனியயுத்தக்கப்பல்களை வரவேற்கும்படியாக கேறலையத்தின் பிரித்தானிய கப்பற்தளபதியான பியாட்டி என்பவர் அமரிக்கப்பற்றளபதியான சிம்சுடன் கூடக் குவீன்எலிசபேத்என்னும் யுத்தக்கப்பலில் [illegible] அவைகள் [illegible] துறைமுகங்களிலிருந்துபுறப்படுவதாயிருக்கும். பிரித்தானியரின் உரோஷமுள்ள யுத்தக்கப்பல் கூட்டத்துடனும் ஐக்கியகட்சியாரின் யுத்தக்கப்பல்களுடனும் வடகடலில்குறிக்கப்பட்ட இடத்தில் யுத்தஅணிவகுப்பாகச் சந்திப்புக்கொடுப்பது சரித்திரசம்பந்தமாய் ஒப்பற்ற ஒருநிகழ்ச்சியாகும் ஐக்கிய கட்சியாரின் கப்பல்கள் 1000 உடையதாயிருக்குமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

பெல்ஜிய மீட்பு.

20௳ ஆல்பட் அரசரவர்கள் 19 ம் தேதி அண்ட்வெர்ப்பட்டணத்தில் ராசரீக பிரவேசஞ்செய்து சனங்களால் சந்தோஷமாய் வரவேற்கப்பட்டனர்.

20௳ பிரசல்ஸிலிருந்து 17ம் ம் தேதி வந்த தந்தியாவது:—இன்றையத்தினம் கடைசியாகப் புறப்பட்டசெர்மனியர் பகலில் வண்டிகளையும் குண்டுகளையும் சமாமான கட்டடங்களையும் 3 இடங்களில் வெடிக்கச்செய்தனர். அப்போது பட்டணம் அதிர்ந்து அநேகவீடுகள் சேதகப்பட்டன. பிற்பகலிலும் இரவிலும் வெடிப்புகள் உண்டாகிக்கொண்டிருந்தன. சேதங்கள் வெளியாகவில்லை. அழிவுக்கு வியல்களின் அடியிலிருந்து அநேகர் இறந்தவர்களாய் எடுக்கப்பட்டனர்.

பெல்ஜியத்தில் புதிய அரசாட்சி.

20௳ எல்லாப் பிரதான கட்சிகளின் பிரதிநிதிகளைக்கொண்டு ஒரு புதிய அரசாட்சி அமைக்க ஆல்பட்அரசர் தீர்மானித்திருக்கிறார்.

செர்மன் நாசகாரிகள் ஓடிவிட்டன.

20௳ அன்ட்வெர்ப்பிலிருந்து 11 செர்மன் நாசகாரிகள் டச்சு எல்லையிலுள்ள ஒரு வெறேதேசத்துக்கு வந்திருக்கிறது. எல்லாம் காவலில் வைக்கப்பட்டிருக்கின்றன.

விடுவிக்கப்பட்ட கைதிகள்.

20௳ பிரித்தானிய இத்தாலிய ருஷியருட்பட ஆயிரக்கணக்கான கைதிகள் டச்சு எல்லையைத் தாண்டிச் செல்லுகின்றனர்.

நடுவுநிலைமைமீறினது.

21௳ ஒல்லாந்தானது நடுவுநிலைமையை மீறிச் செர்மன் சேனைகளை லிம்பர்க்வழியாய்ச் செல்லும்படி விட்டுவிட்டிருக்கிறதாகையால் ஐக்கியகட்சியாரின் கவர்ன்மெண்டார் ஒல்லாந்துக்குக் கண்டிப்புப்பத்திரம்கொடுக்கத்தீர்மானித்திருக்கிறார்கள்.

ஜெனரல் மாஞ்சினின் விளம்பரம்.

20௳ மெட்ஸ்பட்டினத்தில் பிரவேசித்தவேளையில் ஜெனரல் மாஞ்சின் ஒருவிளம்பரம் பிரசித்தப்படுத்தினார். அதாவது அநேகநாற்பதாண்டாய் நீதிகள் ஒடுக்கப்பட்டுத் தொல்லைப்பட்டுக் கஷ்டமனுபவித்த அரசாட்சி முற்றும் நீக்கப்பட்டுப்போனது. பிரான்சுதேசமானது லோரேன்மாகாணத்துக்கு விடுதலையையும் நீதியையும் கொண்டுவருகிறது. பிரான்சானது மீட்கச்செய்யப்பட்ட அதன் பிள்ளைகளுக்குவேண்டிய எல்லாஞ்செய்ய அதன் கைகளை விரியத் திறந்திருக்கிறது என்பதே.

20 சப்மரீன்கள் முதலாவது சரணடைந்தன.

19௳ ஹார்விச்சுக்கு 30 மைல்தூரத்தில் நமது [illegible]க்கப்பல்களும் முதல் 20 யூப்போட்டுச் சப்மரீன்கள் சரணடைந்ததைப் பின்னணியத் தளபதி டைர்விட் ஒப்புக்கொண்டார். 20ம் தேதி சூரியோதயத்தில அவைகளின் சொந்தமாலுமியால் நடத்தப்பட்டு அவைகள் ஹார்விச்சுக்குச் செல்வதாகும்.

ஆல்சேஸ்லோரேன்.

ஆல்சேஸ்லோரேன் மாகாணங்களைத் திரும்பக்கைப்பற்றியதின் கண்ணியார்த்தமாய் ஒரு பெரும் கொண்டாட்டம்நடந்தது. நோட்டர்ஆலயத்திலும் மற்றும் எல்லா ஆலயங்களிலும் தேதெயும் பாடப்பட்டது. சாம்ஸ் எலிசீஸ் தெருவழியாய்ப் பிற்பகலில் ஒருபவனிசென்றது. சனக்கூட்டங்கள் மிகவும் உற்சாகங்காட்டின.

17௳ ஆல்சேஸ் லோரேன்மாகாணங்களில் பிரவேசிக்கும் கண்ணியம் பிரான்ஸியருக்கு விடப்பட்டிருக்கிறது. அவர்கள் நாளையத்தினம் மெட்ஸ் பட்டினத்திற்புகுந்து கோல்மார் முல்காசன் என்னுமிடங்களைக் கைவசப்படுத்துவார்கள். செர்மனியர் 5000 பீரங்கிகளையும் 2500 மெஷின்பீரங்கிகளையும் கிரமக்கிரமமாய்க் கொடுப்பார்கள்.

18௳ பிரான்ஸியர் லோரேன்மாகாண எல்லையைத் திங்கட்கிழமை அதிகாலை கடந்தனர். கைவசப்படுத்தவேண்டிய முதற்பட்டணமாகிய சாட்டாசாலீனில் பிரவேசிக்கும் கண்ணியம் பேர்பெற்ற மொராக்கன் படைவகுப்புகளுக்குக் குறிக்கப்பட்டிருந்தது.

முதலாவது ஸ்பாகிஸ்படையும் பின்புசேர்வைபடையும் அதன்பின் பிரதேசப்படையமாக டிவிஷனல் கம்மாண்டர் ஜெனரல் டாசன் குதிரைமீது சவாரிபோகப் பட்டண நால்கட்டத்துக்கு வந்துசென்றன. பிரான்சியசேனையில் முதன்மையானதும் ஜோத்திரவத்தையிட்டுக் கௌரவிக்கப்பட்டதுமான பட்டாளங்களுக்குரிய துவசத்துக்கு முன்னுச வைபவார்த்தமாய் அவர்கள் இராணுவமரியாதைசெய்தனர். சனங்கள் அதற்கு நாட்டாக்கள் அணிந்து உற்சாகமாய ஆரவாரஞ்செய்தனர்.

கிழாபிரிக்கா.

16௳ யுத்தஓய்வுப் பிரமாணப்படி வான் லெட்டோ வோர்ப்பெக் தளபதியின் கீழுள்ள செர்மன்சேனையானது கார்த்திகை மீ 14 ம் தேதி காலையில் கசாமாவுக்குத்தெற்கே சாம்பசிக்கரைப்பக்கமாய் ஒப்புக்கொடுத்தது.

1௳ ஜெனரல் மாக்கன்சன் 2000 சைனியர்களுடன் மோட்டார் வண்டிகளில் கங்கேரியிலுள்ள டெபிரின் என்னுமிடத்திலிருந்து சேர்த்தனர். தங்கள் இடங்களுக்குச்செல்லும் செர்மனிய சைனியர்களை கங்கேரியஅதிகாரிகள் நிராயுதபாணிகளாக்கினர்.

துருக்கி.

18௳ ருஷியபிரித்தானிய சேனையால் பாகுபட்டணம் கார்த்திகை மீ 17 ம் தேதி கைவசப்படுத்தப்பட்டது.

20௳ கொன்ஸ்தாந்திநோபிளிலிருந்து, டைம்ஸ் பத்திரிகைக்கு வந்த ஒருதந்தியாவது—இரெண்ட் விஸியாரான இஸ்ஸெட்பாசா உத்தியோக மவிட்டு [illegible] ஐக்கியகட்சியாருக்கு மிகவுஞ்சார்பான ஒருஅரசை ஏற்படுத்தியிருக்கிறார். காமிப்பேயும் பிரதேசமந்திரியாகும் அன்வர் பாசாவும் தல்அத்பாசாவும் ஒரு செர்மன் நாசகாரிக்கப்பலிலேறிப் புறப்பட்டுவிட்டார்கள் அன்வர்பாசா காக்கசுக்கும் தல்அத்பாசா ஒடிசாவுக்கும் ஒருவேளை போக்கூடும்.

யுத்தத்தைபற்றியசெய்திகள்.

பிரித்தானிய இராணுவ சேதங்கள்.

19௳ ஆகாயப்படைநீங்கலாகக் குடியேற்றநாடுகளின்படையும் இந்தியபடையுமுட்பட எல்லா யுத்த அரங்கங்களிலும் கார்த்திகை மீ 10௳ வரையுண்டான பிரித்தானிய இராணுவச் சேதங்களின்மொத்தம் 3050000. அதில் 142634 உத்தியோகஸ்தர்களும் 2900000 சேவகருமாகும். கொல்லப்பட்ட உத்தியோகஸ்தர்கள் 620828.

பிரான்சிய மொத்தசேதம 126700 உத்தியோகஸ்தர்கள், 2593000 சேவகர். அதில் கொல்லப்பட்ட உத்தியோகஸ்தர் 32800, சேவகர் 627000.

டாடனல்ஸில் சேதப்பட்டவர்களின் மொத்தம் உத்தியோகஸ்தர் 8000. சேவகர் 115000. அதில் கொல்லப்பட்ட உத்தியோகஸ்தர் 1800. சேவகர் 32000.

சலோனிக்காவில் மொத்தச்சேதம் உத்தியோகஸ்தர் 1200. சேவகர் 26000.

மொசேப்பொத்தாமியாவில் உத்தியோகஸ்தர் 4300. சேவகர் 93000.

எகிப்தில் உத்தியோகஸ்தர் 600. சேவகர் 45000

கிழ்ஆபிரிக்காவில் உத்தியோகஸ்தர் 900. சேவகர் 17000.

செர்மனிய அன்னியோன்னியகட்சியாரின் வேண்டுகோள்.

18௳ செர்மனிய அன்னியோன்னிய தனிக்கட்சியார் எதிருமுள்ள தனிக்கட்சியாருக்கெல்லாம் மறுக்கொடுத்து உங்கள் செர்மன் சகோதரர்களை ஒடுக்கப்பட இடங்கொடாதிருங்களென்று கேட்டிருக்கின்றனர்.

செர்மனிக்குத் தானியம்.

19௳ ருஷியாவிலுள்ள சோவியட்அரசாட்சியார் செர்மனிக்குத் தானியங்கொடுப்பதாகத் தெரிவித்ததாகவும், ஐக்கியகட்சியார் செர்மனிக்குக் கொடுப்பதாக வாக்களித்திருக்கிறார்களென்று செர்மன்அரசாட்சியொல்லி அதைநிராகரித்துவிட்டதாகவும் பெர்லினிலிருந்து கொப்பேனகன் அறிக்கை கூறுகிறது.

பி. சுப்பரமுயின் அபூர்வ ஆயுர்வேத அவுஷதங்கள்.

கஸ்தூரிக்கலத்த லாவண்டர் வாட்டர்— எங்களுடைய அவுஷதசாலையில் தயாராக்கப்பட்ட மிகவும் சுத்தநிரவியம் சேமயிலிருந்து கருணைந்து விற்கிற வஸ்துவல்ல எப்பேர்ப்பட்டவர்களையும் மயக்கக்கூடிய சுவாசனை வஸ்திரங்களை உபயோகித்தால் இன்பமான சுகந்தத்தை தரும் இத்தசுகந்தத்தை நாலுநாள்கள் உபயோகித்தால் கடைகளில் சாதாரணமாக விற்கும் லாவண்டர் வாட்டரை இருபது தினகள் உபயோகி

த்தால் எம்மாதிரியான சுகந்தமிருக்குமோ அதைவிட ஜாஸ்தியாக எம்முடைய லாவண்டர் வாட்டர் மனோரம்மியமான சுவாசனையை வீசும். உபயோகித்தவர்களைச் சுற்றி வெகுநேரம் பரிசுத்தமான பரிமளத்தைப் பரவச்செய்யும் அரைஅவுன்சு சீசாக்களில் விற்கப்படுகிறது. விலை சீசா ஒன்றுக்கு அணா எட்டு, வி பி செலவு ஒன்றுமுதல் ஆறுசீசாக்கள்வரையிலனுப்ப அணா 5 பிரத்தியேகம்.

சோடாவாடர்பவுடர்—இச்சூரணத்தில் கொஞ்சமெடுத்துக் குளிர்ந்த சலத்துடன் கலந்துகொண்டால் அதிஉசிதமான சுவையான சோடாவாடருண்டாகும் ஒருசீசாவிலுள்ள பவுடர் சுமார் 8சீசா சோடாவாடர்செய்யப்போதுமானது விலைசீசாஒன்றுக்குஅணா 6 வி பி செலவுஒன்றுமுதல் 4 சீசாக்கள்வரையில்அணா5பிரத்தியேகம் லெமனெட் பவுடர்—இச்சூரணத்தில் கொஞ்சமெடுத்துக் குளிர்ந்தசலத்துடன் கலந்தால் அதிஉத்தமமான லெமனெட் தயாராகிவிடும் ஒருசீசாவிலுள்ள சூரணம் சுமார் 8 பெரிய சீசா லெமனெட் செய்யப்போதுமானதுவிலை சீசா ஒன்றுக்கு அணா 6 வி பி செலவு ஒன்றுமுதல்4 சீசாக்கள்வரையில் அணா 5 பிரத்தியேகம்

கேசர்பவுடர்—இது ஓர்விதமான விலைபெற்ற சுகந்தகலவை, இதிற்கொஞ்சமெடுத்துத் தண்ணீரிற்கலந்தாவது அல்லதுகொஞ்சம் சந்தனத்திற்கலந்தாவது தேகத்திற்பூசினால் எல்லாரும் புகழத்தக்கபரிமளத்தைத்தரும் கலியாணம் முதலிய சுபகாரியங்களுக்கு இதை அவசியமாகஉபயோகிக்கவேண்டியது இதன் இன்பமானசுகம் உபயோகித்தவர்களுக்குத்தான் தெரியும் ஆனந்தத்துடன் மனோரம்மியமான இச் சிரேஷ்டமானகலவையைச்சேர்த்துக்கொண்டால் சந்தனத்தில் அத்தர் பன்னீர் குங்குமப்பூமுதலியவைகள் சேர்க்கவேண்டியதவசியம், சீசா 1க்குவிலை அணா 8,1முதல் 6 சீசாக்கள்வரையிலனுப்ப வி பி செலவு அணா 5 பிரத்தியேகம்

ஓதிகோலோன்—இது சீர்மையிலிருந்துவரவழைத்ததல்ல எங்களுடைய அவுஷதசாலையில் எங்களால் சுயமாகத்தயாரிக்கப்பட்டது. மனக்களிப்பையுண்டாக்கக்கூடிய சுவாசனையுடம்பில பூசலாம் வஸ்திரங்களுக்குப் போடலாம் இதை உபயோகித்தால் தலைவலி குணமாகும் தேகசிரமத்தைஆற்றும்- வெகுநேரம் வாசனை தங்கிஉபயோகித்தவர்களைச்சுற்றிசுவாசனைபரவியிருக்கும் சாதாரணமாய்த் தண்ணீர்கலந்துகடைகளில்விற்கும் சரக்கைப்போலில்லாமல் இது ஒருசுயமான வாசனைக்கலவை. கடைகளில்விற்கும்ஓதிகோலோன் பத்துத்துளி உபயோகிக்குமிடத்தில் எம்மால் செய்து விற்றுவரும் ஒடி ஓதிகோலோனை இரண்டுதுளிகள் உபயோகித்தால்போதுமானது. அரைஅவுன்சு சீசாக்களில்விற்கப்படுகிறது விலை சீசாஒன்றுக்குஅணா 8 வி பி செலவு ஒன்றுமுதல் ஆறுசீசாக்கள் வரையிலனுப்ப அணா 5 பிரத்தியேகம்.

குறிப்பு—இந்தஇடங்களில மலையாளம் தெலுங்கு கன்னடம் முதலிய பாஷைகள் தெரியாதாவதால் ஆர்டர் செய்கிறவர்கள் தயவுசெய்து தமிழிலாவது இங்கிலீஷிலாவது அடியில்குறித்தவிலாசத்துக்கு விபரமாக எழுதிப்பெற்றுக்கொள்ளக் கோருகிறேன்.

முக்கியகுறிப்பு—ஒரேதடவையில் 12 சீசாவுக்குக்குறையாமல்தேன்கொட்டின்மருந்தில் வாங்கினால் டஜன் 1-க்குரூபா 2-8-0 வீதங் கொடுக்கப்படும். வி.பி. செலவு அணா 5 பிரத்தியேகம் இக்குறிப்புதேன்மருந்தவிர மற்றெந்த மருந்திற்கும் சம்மந்தப்படமாட்டாது.

பன்னீர்—இப்பன்னீர் அரைஅவுன்ஸ் சீசாவில் விற்கப்படுகிறது, இச்சிறுசீசாவிலுள்ள பன்னீரை 3 பெரியசீசா வென்னீருடன்கலந்தால் முதல்தரமான 3சீசா பன்னீராகும் மேன்மையான பன்னீர்விலை சீசா 1-க்கு அணா 8 வி பி செலவு 1 முதல் 3 சீசாக்கள்வரையிலனுப்ப 5 அணா பிரத்தியேகம்

அரகசா—இது மற்றொருவித திவ்யமான சுகந்தகலவை இதைத்தனியாகவாவதுசந்தனத்துடனாவதுஉபயோகிக்கலாம் தேகத்தில் பூசிக்கொள்ளலாம் உடுப்புகளுக்குப்போடலாம் அதிஉன்னதமான வாசனை இதின் திவ்யமானபரிமளத்தைச் சுகித்தவர்களால் மிகவும்புகழப்படுகிறது ஒருதடவைபூசினபிறகு பிரதிதினம் ஸ்நானஞ்செய்தாலும் மூன்றுநாள்பரியந்தம் இதன்இன்பமானபரிமழம் தேகத்திற்தங்கிநிற்கும் விலைடப்பாஒன்றுக்கு அணா 6,1முதல் 12 டப்பாக்கள்வரையிலனுப்ப வி பி முதலியசெலவுகள் அணா 5 பிரத்தியேகம்.

தஞ்சாவூர் பரசாலா அல்லது இளவரசரின் வஷெப்பவுடர் ஒருபாக்கட் விலை அணா 8.

உபயோகிக்கும்விதம்;—சாதாரணமாக இருவர்கள்சாப்பாட்டுக்கு ஒன்று அல்லதுஇரண்டு கெட்டிகை மசாலா போதுமானது. மாக்கறி அல்லது மில்ட்டெரி சாப்பாட்டு குழம்பு கறி துவையல் முதலிய இன்னும்பற்பல சமையல் பதார்த்தங்களில் உபயோகிக்கலாம், எதனுடன் சேர்த்தாலும் அதின்ருசியும் வாசனையும் மனதுக்கு இன்பத்தையேதரும் அவர்கள் ருசிக்குதக்கபடி இந்த மசாலாவைக் கூட்டியும்குறைத்தும் உபயோகிக்கலாம் இந்த மசாலா உபயோகிக்கும் பொழுதெல்லாம் கொஞ்சம் கொத்தமல்லி விரையையும் தேங்காயையும் தனிமையாகவாவது அல்லது நெய் அல்லது எண்ணெயைவிட்டு வறுத்தாவது நன்செய்து சேர்த்துக்கொள்வது நலம் இந்த மசாலாவை ஆகாரத்துடன் உபயோகித்துவருவதால் நீடித்த அஜீரணம் அக்கினிமாந்தந் தீரும்

இத்தப்பொடியில் மாதிரி டப்பிஒன்று எமக்கு அனுப்பப்பட்டது. நல்ல சுத்த வாசனையுள்ளது.
ச—போ—ப.

பரிசுத்தமான தேன்.

காடுகளிலிருந்து ஸ்பெஷலாய் எங்களால்நியமிக்கப்பட்ட வேலைக்காரர்களால் சேகரிக்கப்பட்டது. கடைகளில்விற்கும் வெல்லப்பாகைகலந்த தண்ணீர்போன்றதேனல்ல, இத்தேன் மிகவும்தடிப்பாகவும், ருசிக்கரகவும், சுத்தமாகவுமிருக்கும் கலப்பில்லாத அப்பட்டமான சரக்கு. மேலும் வைத்தியசாஸ்திர முறைப்படிக்கு எங்களால் சுத்தியும்செய்யப்பட்டு விற்கப்படுகிறது. கடைகளில்விற்கும் தேன் ஒருசேர்சேர்க்குமிடத்தில் எம்மால் விற்கப்படும் தேன் 4 துளிகள் உபயோகித்தால் போதுமானது இப்படிப்பட்ட மேலானவும், சுத்தமானவும், சுயமானவும், சரக்கு கிடைப்பதரிது. மருந்துகளை இந்தேனுடன் அனுபானித்து உட்கொண்டால் மருந்துகளின்வீரியமும், குணமும் அதிகரிக்கச்செய்யும்.

விலை டின் 1-க்கு அணா 12 ஒன்று அல்லது இரண்டு டின்கள்வரையிலனுப்ப வி. பி. செலவு அணாபிரத்தியேகம்.

எனது விலாசம்
பி. சுப்பராய்
ஆயுர்வேதஔஷதசாலை
ஸ்ரீ வெங்கடேசபெருமாள்கோவில் சன்னதி
தஞ்சாவூர்

☞ MY ADDRSE
P. SUBBRAOY
Ayurvedic Pharmy
Sri Venkedasa
Perumal Koil
Sannathy
Tanjore

கடல் நுரை தேவை.
வியாபாரிகள் விலைவிபரத்துடன் இதனடியில் கண்டவருக்கெழுதவும்.

கி. இரத்தினபிள்ளை.
2131 தாயார்சாய்ப்புவீதி
செட்டிதோட்டம், மவுண்ரோட்டு சென்னை.

பம்பாய் இமிடேஷன் பட்டுப்புடவைகள்.

16 முழம் நீளம் 46 இஞ்ச அகலம். இது பார்வைக்குவெகுநேர்த்தியாயும் தற்கால நாகரீகத்தின்மாதிரியாயும் உடுத்துபவர்களுக்கு உற்சாகத்தைத் தரக்கூடியதாயுமிருக்கும். இதில் பலவித பூக்களும் புட்டாக்களும்போட்டு வெகு அழகாயிருக்கும். இதைத் துவைத்தும் சலவைசெய்தும் கட்டலாம். ஒருமுறை வாங்கிப்பார்த்தால் உண்மை விளங்கும். புடவை 1-க்கு ரூபா 5—8—0. ஒரேதடவையில் 4 புடவைகள் வாங்கினால் வி. பி. சார்ஜ இனும். பிரியமான வர்ணங்களில் அனுப்பப்படும்.

மதுரை புட்டா சேலை.

18 முழம் நீளம் 2 முழம் அகலமுள்ளது. சாயத்திற்கு உத்தரவாதம். அதில்அனேகவிதமான புட்டாக்கள்போட்ட பல ரகங்களுண்டு. ஒவ்வொருசேலை வாங்குகிறவர்க்கும் எலெக்டிரிக் பொன்மோதிரம் ஒவ்வொன்று பரிசு அளிக்கப்படும்.

விலை ரூபா	3-12-0
பாலாமணி மாங்காய்சேலை விலை ரூபா	3-8-0
பகதர் தவணக்கொடிசேலை விலை ரூபா	3-4-0
சகுந்தலா இமிடேஷன்பட்டுப்புடவை	ரூ.5-8-0
நாசாபுரம் சரிகைசேலை	ரூ.4-8-0
ஹோம் ரூல் சேலை	ரூ. 12-0-0

தற்போது 100-க்கு 25 வீதம் கூட.

சி. சி. லிங்கம் & கம்பெனி.
சௌகார்பேட்டை மதராஸ்.

Veritable! Kind!! Permutable!!!

Rs. 2.0.0 will bring you one goldcoloured framed SPECTACLE. For every order 4 spectcles will be sent and you are requested to select one. Please return the three spectacles after your selection.



Dont miss this golden opportunity.

Apply— SANDOW WATCH & Co
Sowoarpet, Madras.
சாண்டோ வாச்சு கம்பெனி,
சௌகார்பேட்டை, மதராஸ்.

SENSATIONAL DISCOYERY,
OF AMERICA.
ELECTRIC SOLUTION

இலெக்ட்ரிக்
DR D.D.HAZRA

Specific for:—
General Debility.
Loss of Manhood.
Nervous Debility.
Rheumatism.
Dyspepsia.
Costiveness.
Loss of Appetite.
Piles.
Paralysis.
Gonorrhea.
Diabetes.

It lends, or concentrates Electric Current, the want or superfluity of which in the human constitution causes all sort of diseases. It acts like a charm where Allopathic, Homœopathic, Hakimi or Ayurvedic medicines totally failed.

Price— 1 Phial for a month's use Rs. 1/—Postage up to 3 phials As. 6.

Foreign Postage up to phials Rs. 1/—

Sole Agent: Dr. D. D. HAZRA
Fatehpur, Garden-Reach P. O.
CALCUTTA

ஆசியாவின் இரண்டு சுகந்தங்கள் எவை?

Otto Mohini

ஒடோமோகினி.

இரண்டு அல்லது மூன்றுதுளிகள் கைகுட்டையில் தெளித்தால் நறுமணம் பொருந்த பூந்தோட்டத்திலிருந்தாற்போல் மனதிற்கு உல்லாசத்தை யுண்டாக்குகின்றது.

Robinia Oil

ரோபினி ஆயில்.

இவ்விரண்டையும் மறவாதேயுங்கள். இத்தைலம் ஸ்திரீகளின் கூந்தலைக் கறுப்பாயும் பட்டுப்போல் மிருதுவாயும் நீண்டு வளரச்செய்து ஸ்திரீகளின் முகத்திற்கு அழகைத் தருகின்றது.

ஒடோமோகினி	½	அவுன்ஸ்	ரூபா	2—4—0
”	1	டிராம்	ரூபா	1—0—0
”		கார்டுகள் டஜன்	ரூபா	0—12—0
ரோபினியா ஆயில்		சீசா	ரூபா	1—0—0

ஒடோமோஹினிடிபோ,
94 சைனபஜார், மதருவ்ஸ்.

எங்கும் கீர்த்திபெற்ற

பி. எஸ். வாரியரின் ஆர்ய வைத்யசாலை.

கோட்டக்கல் S. மலபார். (இந்தியா)

ஸகல வைத்யர்களுக்கும் நோயாளிகளுக்கும் தேவையான எல்லா ஔஷதங்களையும் மலையாளம் ஆயுர்வேத சாஸ்திரமுறைப்படி தயார்செய்து எப்பொழுதும் ஸகாயமான விலைக்குக்கொடுத்துவருகிற வைத்யசாலை தென்னிந்தியாவில் இஃதொன்றுதான் மிகவும் பேர்போனது.

ஏழைகளுக்கு காலை 7-மணிமுதல் 9-மணிவரையில் தர்ம வைத்யம் செய்யப்படும். இங்குவரும் வியாதிஸ்தர்களை தேக பரிசோதனை செய்து சொல்ப விலைக்கு மருந்துகள் கொடுப்பதோடு இவ்விடத்திலேயே இருந்து சிகிச்சை செய்துகொள்ளவேண்டிய எல்லா ஏற்பாடுகளுஞ் சௌகரியமாகச் செய்துகொடுக்கப்படும்.

வெளியூரிலுள்ளவர்கள் தத்தம் ரோகங்களை விபரமாக எமக்கெழுதிக்கொண்டால் தகுந்த ஔஷதங்கள் நிச்சயித்து உபயோகிக்கக் கிரமங்களுடன் வி. பி. மூலமாயனுப்பப்படும் கடிதங்களையெல்லாம் ரகஸ்யமாகவே வைத்துக்கொள்ளப்படும்.

சில முக்யமான ஔஷதங்கள்.

க்ஷீரபலா தைலம்:—எல்லா வாதரோகங்களையும் குணப்படுத்தும். 101 முறை காய்ச்சினது அவுன்சு 1-க்கு ரூ. 3-0-0.

கஸ்தூரி மாத்திரை:—இருமல், க்ஷயம், மூர்ச்சையாகுதல், கர்ப்பவலி, வாயு உபத்திரவம், விலாப்பக்கம் நோக்காடு, மூச்சு திணறுதல், சந்நிபாத ஜ்வரம் இவைகளைக் கண்டிக்கும். டஜன் 1—க்கு ரூ. 0-12-0.

மதனகாமேஸ்வர லேகியம்:—தாதுபுஷ்டியை யுண்டுபண்ணுவதில் மிகவும் பேர்போனது. 40 ரூபாயிடைபவுண்டு 1—க்கு ரூ. 7-8-0.

சாரிபாராஸம்:—புஷ்டியுண்டாக்கி சரீரத்துக்கு குளிர்ச்சியைக்கொடுத்து ரத்தசுத்திசெய்யும் உயர்த்த ஈன்னாரி எஸ்ஸன்சு. 4 அவுன்சு சீசா 1—க்கு ரூ. 1—7—0.

குமாரி கஷாயம்:—இது முக்கியமாய் ஸ்திரீகளுக்கு மாதவிடாய்காலங்களிலுண்டாகும் பொறுக்கமுடியாத வயிற்றுவலி ரத்தகுன்மம்முதலான எல்லா கோளாறுகளையும் நிவர்த்திசெய்து ஸந்தானபாக்யமடையும்படிசெய்யும். சீசா 1—க்கு ரூ. 3—0—0.

தன்வந்திரகஷாயம்:—ஸகலவிதமான வாதரோகங்களுக்கும் பிரஸவித்த ஸ்திரீகளுக்கும் மேலானகுணத்தைச்செய்யும். சீசா 1—க்கு ரூ. 3—0—0.

விஷூசிகாரிகுளிகை;—காலரா (வாந்திபேதி) என்னும் கொடியவியாதியை சீக்கிரம் கண்டித்துவிடும். டஜன் 1—க்கு ரூ—0—12—0

நாஸிகாசூரணம்:—ஜலதோஷம், பீனிசம், சிரோபாரம், நாஸரோகம் முதலான கழுத்துக்குமேலுண்டாகும் வியாதிகளை சௌக்யப்படுத்தும். சீசா 1—க்கு ரூ—0—5—0, 40 ரூபாயிடைகுர்த்தல் 1—க்கு ரூ. 7—8—0.

ஸ்வர்ணந்திராவகம்:—இது பத்தரைமாற்றுள்ள தங்கத்திலுண்டாக்கப்பட்டது. சருமரோகம், பக்ஷவாதம், பலவீனம், தாதுபலமில்லாமை, அக்கினிமாந்தயம் முதலானவைகளுக்கு ஆச்சரியமான குணத்தைச்செய்யும். 1 அவுன்ஸ் சீசா 1—க்கு ரூ, 8—0—0.

சாதுர்ஜாதரஸாயனம்:—பலகாரணங்களினுலுண்டாகும் இந்திரியநஷ்டம், பலவீனம், கைகால்அசைதல், ஓய்ச்சல், அஜீர்ணம், வயிற்றுவலி, கிராணி முதலானவைகளைப்போக்கி தாதுபுஷ்டியையும் சுகானுபோகங்களுக்கு இன்பத்தையுமுண்டாக்கும். 40 ரூபாயிடைகுர்த்தல் 1-க்கு ரூ. 12—0—0.

இன்னும அநேகவித ஔஷதங்களும் விற்பனைக்குத் தயாராகவிருக்கின்றன. ! விலை ஜாப்தா வேண்டியவர்களுக்கு இனமாக அனுப்பப்படும்.

மானேஜர் ஆரிய வைத்யசாலை.
கோட்டக்கல், மலபார். [இந்தியா]

Printed and published by S.Tambimuttupillai at his Atchuvaly Gnanapragasa Yanthira office, Atchuvaly, Jaffna.